# தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

தென்றல் அலுவலகம், ★ சென்னை - 6.

மலர் 2 | சென்னை | 3—12—55 | சனிக்கிழமை | இதழ் 24 & 25



ஈழநாட்டில் ஈராறுநாட்கள்

பக்கத்து நாடு - சென்னையி லிருந்து விமானத்தில் புறப் பட்டால் ஒன்றரைமணி நேரத் திலேயே போய்ச் சேர்ந்துவிடக் கூடிய தூரம். ஆகவே, இலங்கை சென்று வந்தவர்கள் நீண்ட பயணம் போய் வந்தவர்களைப் போலப் பெருமையடித்துக் கொள்ளமுடியாது. ஆனாலும் இலங்கையின் இயற்கை வளத் தையும், அங்கு வதியும் தமிழ் மக்களின் மன வளத்தையும் கண்டால் உண்மையில் இலங் கைப் பயணம் பெருமைக்குரிய தாகவே தோன்றும்.

7-11-55 அன்று காலை 11 மணி ஏர்-சிலோன் விமானத்தில் புறப்பட்டேன். விமான நிலையத் திற்கு நம் கழகத்தின் உழைப் பாளித் தொண்டர்களும் தோழர் களும் வந்திருந்து வழியனுப்பி வைத்தார்கள். சரியாக ஒன் றரை மணி நேரம் பறந்து நிலத் தையும் கடலையும் தாண்டி யாழ்ப் பாணம் பலாலி விமான நிலையத் தில் போய் இறங்கினேன். உண் மையிலேயே, தமிழ்நாட்டின் நதி வளத்தைக் காணவேண்டு மானால் அந்தப் பதினொரு மணி விமானத்தில்தான் போகவேண் டும். கடற்கரையை ஒட்டியே விமானம் செல்கிறது. அதனால் பல நதிகளும் கடலில் சங்கம மாகும் காட்சியைக் காணமுடி கிறது. இலங்கைக்கரை வந்து விட்டது என்பதற்கு அறிகுறி யாக குவியல் குவியல்களாகத் தென்னைமரங்கள் தெரிகின்றன. இயற்கையழகு மெய்மறக்கச் செய்கிறது. ஆனால் விமான நிலையமோ செழிப்பில்லாமல் வெறிச் சென்றிருந்தது, நான் போய் இறங்கியபோது.

அங்கே மட்டக்களப்பு நண் பரும் 'தமிழகம்' பத்திரிகையின் ஆசிரியருமான தோழர் செ. இராசதுரை அவர்களும் நண்பர் களும் வந்திருந்தார்கள்.

மீனம்பாக்கம் விமான நிலையத் தில் நண்பர்கள் அணிவித்த மாலை என்னுடனேயே பிர யாணம் செய்து பலாலி விமான நிலையத்தில் என் கையோடு இறங்கிற்று. இதை வேறு ஏன் சுமக்க வேண்டுமென்று விமான நிலையத்திடலில் ஒரு மூலையில் போட்டுவிட்டு நேரே கஸ்டம்ஸ் ஆபீசுக்குள் நுழைந்தேன். என் பெட்டி அங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தது. நான் நுழைந்ததும் நுழையாததுமாக கஸ்டம்ஸ் அதிகாரி 'உங்களைக் கைது செய்யப்போகிறேன்; தண்டனை கிடைக்கும்' என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை தமிழ்நாட்டிலிருந்து வரும் எல்லோரையுமே கைது செய்யச் சொல்லியிருக்கிறார் களோ என்று எண்ணமிட்டேன்.

(ஆமாம், அன்றைய விமானத்தில் பிர யாணம் செய்தவன் நான் ஒருவன் தான். முழு விமானமும் என்னை மட்டுமே பிரயாணியாகத் தூக்கிக் கொண்டு பறந்தது. ஏர் - சிலோன் கம்பெனிக் காரர்களை நினைத்து எனக்கு அழுகை



அழுகையாக வந்தது. மீனம் பாக்கம் அதிகாரிகள் என்னிடம் அவ்வளவு அன்பு காட்டியது ஏன் என்று எனக்கு அப் போதுதான் புரிந்தது. அன் றைக்கு நான்தானே அவர் களுக்கு "போணி") திடீரென்று அந்தக் கஸ்டம்ஸ் அதிகாரி, "நீங்கள் கையில் கொண்டுவந்த மாலை எங்கே?" என்றார். சரி சரி, மாலையை மூலையில் போட் டதை இவர் பார்த்தார்போலி ருக்கிறது "-என்று எண்ணிக் கொண்டு "செடி மறைவில் போட்டுவிட்டேன் " என்றேன். " தவறு தவறு, அதற்குள் தங்கத்தை ஒளித்துவைத்திருக் கிறாய், வைரத்தை ஒளித்து வைத்திருக்கிறாய், பித்தளை, செம்பு, அலுமினியம், கெம்பு எல்லாவற்றையும் ஒளித்துவைத் திருக்கிறாய்"என்று சத்தம்போட ஆரம்பித்தார் அந்த அதிகாரி. "அதற்குள் இவ்வளவையும் ஒளிக்க முடியுமா அய்யா?"- என்று நான் கோபமாகக் கேட் டதற்கு "முடியும், அந்த நார் இருக்கிறதல்லவா நார், அதற் குள் தங்கத்தையும், வைரத்தை யும் வைத்துச்சுற்றிநன்றாகக்கட்டி விட வேண்டும்; அதற்குமேல் புஷ்பங்களை அடுக்கினால் தெரி யாது" என்று விளக்கமும் கொடுத்துவிட்டு " நீ அப்படித் தான் செய்திருப் பாய்" என்றார் அவர். "இல்லை இப்போது செய்ய வில்லை; அடுத்து வரும் போது நீங் கள் சொல்லிய விளக்கத்தைப் போலவே செய்து கொண்டு வருகி றேன்" என்று மன தில் எண்ணிக் கொண்டு "அதோ அங்கேதான் கிடக்கிறது, எடுத்துவரச் சொல் லுங்கள்"-என்றேன். ஒரு ஊழி யர் வேக வேகமாகப் போனார். நண்பர் ராசதுரை கையில் கொண்டுவந்திருந்த மாலையைப் பிடுங்கிக்கொண்டு தங்கமிருக் கிறதா என்று சோதிக்க ஆரம்பித் தார். "இது நாங்கள் கொண்டு வந்த மாலை " என்று ராசதுரை கோபமாகச் சொன்னதும், ஊழி யர் அந்த மாலையை அவரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிவந்து 'மாலையை அங்கே காணவில்லை' என்று அதிகாரியிடம் கூறினார். அதிகாரி பரிதாபமாக என் முகத்தைப் பார்த்தார். நான் வேகமாகப் போய் அந்த மாலையை எடுத்து வந்தேன்.

அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்த அந்த அதிகாரி சாந்த மடைந்தார். "இனி இதுமாதிரி செய்யாதீர்கள். இந்தியாவிலி ருந்து மாலைமூலம் வியாதி ஏதா வது இலங்கையில் பரவிவிடக் கூடும்" என்றார். "இது இந்தி மாலை அல்ல, தமிழ் மாலை" என்று சிரித்துக்கொண்டே கூறி விட்டு கஸ்டம்ஸ் பரிசோதனை களை முடித்துக்கொண்டு வெளி யில் வந்தேன். நண்பர்கள் மலர்ந்த முகத்தோடு வரவேற் றார்கள். திடீரென்று சில பத்தி ரிகை நிருபர்கள் ஓடிவந்தார்கள். "தமிழ்நாடு எப்படி இருக்கிறது? அங்கே மூன்றும் இரண்டும் அஞ்சுதானா? பருத்தியில் இருப் பது பஞ்சுதானா? மலை கல்லுத் தானா? மண்வெட்டி இரும்பு தானா?" என்பதிலே தொடங்கி கேள்விக் கணைகளைத் தொடுத் தார்கள். [இந்த இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை நிருபர்கள் இருக்கிறார்களே அவர்கள் அச காய சூரர்கள். வருகிறவன் வாயைக் கிளறுவதில் அவர்களுக் குள்ள திறமையே திறமை.]

நான் பொறுமையாகப் பதில் சொல்லிமுடித்தேன். இலங்கை மொழிப்பிரச்சினை பற்றி தங்கள் கருத்தென்ன என்றார்கள். 'கப்' என்று வாயை மூடிக்கொண் டேன். திடீரென்று நாக்கு இழுத்துக் கொண்டுவிட்டதா? ஊமையாகிவிட்டாரா? என்று அவர்கள் சந்தேகிக்கும்போது "அதைப் பற்றிப் பேசக்கூடாது என்பது அண்ணா உத்தரவு. இலங்கை நிலவரத்தைத் தெரிந்துகொண்டு போகவே வந்தேன்" என்றேன். அவர் களின் முகங்கள் சுருங்கின. "ஏதாவது இலங்கையைப் பற்றிக் கொஞ்சம்..." என்று மெதுவாக இழுத்தார்கள். "சொல்கிறேன்" என்று தொண் டையைக் கனைத்துக்கொண்டு ஆரம்பித்தேன்.

"இலங்கை இராவணன் ஆண்ட பூமி; கோழிமுட்டை வடி வத்தில் இருக்கிறது. இந்த நில பாகம் லெமூரியாக் கண்டத்தில்

— 3-ம் பக்கம் —

★ தென்றல் இலங்கை மலர்-விலை அணு மூன்று ★

சிலம்பு தந்த செல்வம்

சிலப்பதிகாரமும் மலையாள நாடகமும்

மலையாள நாட்டில் சமஸ்கிருத நாடகம் வட இந்தியாவிலுள்ள சமஸ்கிருத நாடகங்களைவிட நீடித்த பழமையுடையது. அதனைவிட நீடித்து வளம்பெற்றும் இருந்தது. பாசன் காலத்திலிருந்து இன்று வரை அது இடையறாது நிலவி வந்துள்ளது.

உண்மையில் மலையாள நாட்டு நாடகம் வட இந்திய சமஸ்கிருத நாடகங்களை விடப் பழமையானது மட்டுமல்ல. அது சமஸ்கிருத மொழியைவிடப் பழமை வாய்ந்தது. சிலப்பதிகார காலத்திற்கு முன்னிருந்தே அது நீடித்த வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. உலக நாடகக் கலை வளர்ச்சியின் வரலாற்றிலே, மலையாள நாட்டுக்கு ஒப்பாக மூவாயிரம் ஆண்டுககு மேல் நீடித்த வளர்ச்சியுடைய நாடக மரபை, நாம் வேறு எந்த மொழியிலோ நாட்டிலோ காண முடியாது.

மலையாள நாட்டு நாடக மரபின் பழமையை சிலப்பதிகாரத்தின் (வஞ்சிக் காண்டம் 28வது நடுகற் காதை 75-77) அடிகள் குறித்துக் காட்டுகின்றன.

"இமையவன் ஆடிய
கொட்டிச் சேதம்
பாத்தரும் நால்வகை
மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன்
ஆடலில் மகிழ்ந்து"

என வரும் அடிகளால் சேரன் செங்குட்டுவன் வடநாட்டு யாத்திரை முடிந்து வந்தபின் பல வகைக் களியாட்டுக்களைப் பார்வையிட்டபோது, அவற்றிடையே சாக்கைக் கூத்தையும் கண்டு மகிழ்ந்தான் என்று அறிகிறோம். இக் கூத்தை அரசன்முன் ஆடியவன் பறையூர் கூத்தச்சாக்கையன் என்று குறிக்கப்படுகிறான். டாக்டர் சாமிநாத ஐயர், தம் சிலப்பதிகாரப் பதிப்பில் இவ்வடிகளின் கீழ், "சாக்கையர் என்னும் ஒரு வகைச் சாதியார் இப்பொழுதும் கூத்து நிகழ்த்தும் தொழிலுடையவராக மலையாள நாட்டிலுள்ளனர் என்று தெரிகிறது" என்று குறிப்பிடுகிறார். பறையூர் என்பது வட திருவிதாங்கூரில் இன்றுமுள்ளது. அது, திருவாங்கூரில் மிளகு பெருக்கமாக விளையும் பகுதியாகிய குட்டநாட்டிலிருப்பதால் குட்டம்பறவூர் என்று இன்று வழங்குகிறது. இவ்வூரில் இன்னும் தமிழர் மிகுதியாக உள்ளனர். இவ்வூரில் சாக்கையர் குடியினர் இன்னும் இருக்கின்றனர். இன்றும் சாக்கைக் கூத்தைக் கோயில்களில் பொதுவாகவும் திருவாங்கூர் அரசின் தலைமைக் கோயிலாகிய திருவனந்தபுரம் பதுமனாபசுவாமி கோயிலில் சிறப்பாகவும் ஆடுகின்றனர். இதற்காக அரசியலாரிடமிருந்து அவர்கள் மாதச் சம்பளமும் பயணப்படியும் மானியங்களும் பெற்றுள்ளனர். இன்று அவர்கள் ஆடும் சாக்கைக் கூத்து இராமாயணக் கதையையே நடித்துக் காட்டுவதால் அது "இராமனுட்டம்" என்று அழைக்கப்படுகிறது.

மூவாயிரம் ஆண்டு வளர்ச்சி

திருவாங்கூர் அரசர் பண்டைய சேரர்குடியின் ஒரு கிளை மரபினர் என்று கருதத்தக்கவர். சேரன் செங்குட்டுவன் காலத்திலிருந்து இன்றுவரை சேரர்களே மரபு குலையாமல், செங்குட்டுவன் முன் சாக்கைக் கூத்தாடிய அதே ஊரின்

பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரை,
எம். ஏ. எல். டி.,

அதே குடும்பத்தினர் இன்றும் அக் கிளை மரபினர் பணியில் நின்று நாட்டுத் தலைமைக் கோயிலில் ஆடி வருகின்றனர் என்பது வியப்புக்குரிய செய்தியேயாகும்.

தமிழ்நாட்டிலும் இதே சாக்கைக் கூத்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழரசர்களால் ஆதரிக்கப் பட்டுவந்தது என்பதற்கு சோழப் பேரரசர் [illegible]சான்றுகள் உள்ளன. முதலாம் இராசேந்திர சோழன் அல்லது கங்கைகொண்ட சோழனுடைய கல்வெட்டு ஒன்று உடையபாளையம் வட்டத்தில் காமரசவல்லி என்னும் ஊரிலுள்ள சிறந்த சாக்கை நடிகன் ஒருவனுக்குச் சோழமன்னன் 'சாக்கை மாராயன்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கியதாகக் குறிப்பிடுகிறது.

சிலப்பதிகாரம் ஒரு சாக்கையர் கூத்து நாடகமே

சிலப்பதிகாரத்துக்கு முன்னிருந்தே சாக்கைக் கூத்தும் பிற கூத்து வகைகளும் மலையாள நாடு உட்பட்ட பண்டைத் தமிழகமெங்கும் வழக்கிலிருந்து வந்தது. செங்குட்டுவன்முன் சாக்கையன் ஆடிய கூத்து சிவபெருமான் உமையவள் காண நின்று ஆடிய கொட்டிச் சேதம் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆனால், சிலப்பதிகாரமே கண்ணகி விழாவிலோ அல்லது அதன்பின் கண்ணகி கோயில் களிலோ ஆடப்படுவதற்காக இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட ஒரு சாக்கைக் கூத்து இலக்கியம் என்று எண்ண இடமுண்டு. கீழ்வரும் செய்திகள் இதை வலியுறுத்தும்.

1. மூவரசருக்கும் நாடுகளுக்கும் சிலப்பதிகாரத்தில் இடந்தரப்பட்டுள்ளது. மூன்று நாடுகளினும் அப்பாலும் ஆடப்படுதற்குரிய தமிழ்த் தேசிய நாடகமாக அது இயற்றப்பட்டிருக்கிறது. அயல் நாட்டரசர் பெயர்கள் அதற்கு அரச அவையிலும் மக்கள் மன்றங்களிலும் நாடகம் என்ற முறையில் அரசியல் மதிப்பும் ஆதரவும் தருவதற்குரியன.

2. கண்ணகியின் கதையில் அவள் தெய்வமாகக் காட்சியளித்த நிகழ்ச்சியும் அதன்பின்னுள்ள விழா முதலிய நிகழ்ச்சிகளும்இடம் பெறுகின்றன. அது ஒரு விழா நாடகம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

3. சிலப்பதிகாரக் கவிதை, உவமையிலிருந்து உவமைக்கு அடி தோறும் தாவிச் செல்கிறது. கம்பராமாயணம், சிந்தாமணி முதலிய தமிழ்க் காவியங்களுடனும் பிற மொழிக் காவியங்களுடனும் ஒப்பிட்டுப் பார்த்தால் சிலப்பதிகாரக் கவிதை வாசிப்பதற்குரியதன்று, கேட்பதற்கும் நடித்துக்காண்பதற்கும் உரியது என்பது விளங்கும். பரத நாட்டிய முத்திரைகளுக்கும் பாவங்களுக்கும் இடந்தராத ஒரு அடியைக்கூட சிலப்பதிகாரத்தின் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அடிகளில் காணமுடியாது.

4. கதை உறுப்பினரும் கதையும் மெய் வரலாற்றுக்கு உரியவரானும், சிலப்பதிகாரம் நாடகமாதலால் சமுக நாடகப்பண்பை, கற்பனைத்திறம் பட விரிவிக் காட்டியுள்ளது. இதற்கு இணங்கவே கதையின் இறுதி நிகழ்ச்சியாகிய கண்ணகியின் தெய்வீக அருட் செயல்களும் குறவர் காட்சியும் செங்குட்டுவன் படையெழுச்சி விழா ஆகிய செய்திகளும் மட்டுமன்றி ஆசிரியர் நூலை செய்த வரலாறும் இணைக்கப்பட்டுள்ளன. காவியம் என்ற வகையில் இது ஒரு குளறுபடியாகும் ஆனால் நாடகம் என்ற வகையில் இதை விடச் சிறந்து மக்கள் உள்ளம் தடவும் முறையை யாரும் எண்ணிப் பார்க்கமுடியாது.

சிலப்பதிகாரம் குறவர்கள் மனக் கண்முன் ஆர்வக் கற்பனையால் கண்டு கூறிய நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு, சமய வாதியாகிய கூலவாணிகன் சாத்தனர் அவதா. [illegible] கதைகளை இணைத்து, இவற்றிற்கு இணங்க கதைப் பின்னணியை உருவாக்கிக் காட்டுகிறது.

5. தமிழகத்தில்சாக்கைகூத்தும் நாடகமும் தடமற அழிந்தபின்பும் கோவலன் கண்ணகி கதை தெருக் கூத்தாகவும் மக்கள் நாடகமாகவும் நம் காலம்வரைநீடித்து நிலவியுள்ளது. இதை நோக்க, அது தொடக்கத்தில் சாக்கைக் கூத்தாக நடிக்கப்பட்டு, அக்கூத்து வழக்கிறந்தபின், வெறும் கதை நாடகமாகப் பயின்றிருக்கவேண்டும்.

6 கடைசியாக, தமிழகம் சிலப்பதிகாரக் கதையையும் இலக்கிய மரபையும் நமக்குப் பேணித்தரினும் சாக்கைக் கூத்தைத் தரவில்லை ஆனால் மலையாள நாடு சிலம்புக் கதையையும் காவியத்தையும் மறந்துவிட்டது. சாக்கைக் கூத்தைமட்டும் அழியவிடாமல் காத்து வளர்த்துத் தந்துள்ளது.

மேற்கூறியவற்றால் பண்டை முத்தமிழ்க் கலை சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவன் காலத்தில் அரசவையிலும் கண்ணகி கோயில் களிலும் மக்கள் மன்றங்களிலும் நடிக்கப்பட்டுவந்த ஒரு சாக்கைக் கூத்து நாடகமே என்றும், தமிழகம் கலை தேய கதையை நமக்குத் தந்ததுபோல, மலையாள நாடு கதை தேய கலையை நமக்குத் தந்துள்ளது என்று காணலாம்.

◎ ◎◎◎ ◎

மின்சாரம் தாக்கியபோது

டக்ளஸ் ஃபேர்பாங்க்ஸ் என்ற பிரபல நடிகருக்குத் தமாஷ் செய்வதில் வெகு பிரியம். அவர் வீட்டில் மின்சாரக் கம்பிகள் பொருத்திய நாற்காலிகள் உண்டு. விருந்தாளிகளை அதில் உட்கார்த்தி லேசாக மின்சாரம் தாக்கச் செய்வார். அப்போது விருந்தாளிகள் துள்ளி எழுவதைக் கண்டு அவர் சிரிப்பார். மவுண்ட்பாட்டன் தம்பதிகளைக்கூட ஒரு சமயம் அதில் உட்கார்த்தித் தமாஷ் செய்துவிட்டார்.

ஒரு நாள் வாலிபப் பெண் ஒருத்தி விருந்தாளியாக வந்தாள். நடிகர் அவளை நாற்காலியில் உட்கார்த்தி வைத்தார். உடனே, பட்லரைப் பார்த்துக் கண்ணடித்தார். பட்லர் மின்சார ஸ்விட்சைப் போட்டான். பெண் துள்ளி எழ வேண்டுமே; இல்லவே இல்லை. துளியும் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

நடிகருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. மின்சாரம் தடைப்பட்டதோ என்று எண்ணி, "அம்மா சற்று எழுந்திருங்கள்" என்றார்.

வாலிபப் பெண் எழுந்தாள். நடிகர் தாமே அதில் போய் உட்கார்ந்தார். உட்கார்ந்ததுதான் தாமதம், டபக் கென்று துள்ளிக் குதித்தார்.

"ஏன் அம்மா, உங்களை மின்சாரம் தாக்கவில்லையா?" என்று கேட்டார்.

"என்னவோ ஒரு மாதிரிதான் இருந்தது. ஸினிமா நடிகரைப் பார்க்கும்போது அப்படித்தான் உணர்ச்சி உண்டாகும் என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டேன்" என்றாள் பெண்.

— ஜோன் க்ராஃபோர்டு, 'வுமன்ஸ் ஹோம் கம்பானியன்'

◎ ◎◎◎ ◎

நாங்களும் நீங்களும்

இலங்கையில் " தென்றல் "

இலங்கையிலே 'தென்றல்' வெற்றி முரசு கொட்டுகிறது. ஒவ்வொரு ஊரிலும் ஏராளமான தோழர்கள் தென்றலின் உறுப்பினர்களாகச் சேர்ந்தார்கள். பலர் தாங்களாகவே வலிய வந்து உறுப்பினர் தொகை கொடுத்தார்கள். இப்போது 'தென்ற'லின் கிளை ஒன்று மட்டக் களப்பில் துவக்கப் பட்டிருக்கிறது. **"தென்றல்" கிளை, 170, டிரிங்கோ ரோடு, மட்டக் களப்பு, இலங்கை** என்பதே கிளை அலுவலக முகவரி. இந்த நல்ல செய்தியை இலங்கை நண்பர்களுக்கும், தமிழகத்துத் தென்றல்நேயர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். மட்டக்களப்புப் பிரமுகர்களே இந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இராம. சுப்பையா

தமிழகம் முழுவதிலும் தென்றலுக்கு இன்னும் அதிகமான ஆதரவும் ஆக்கமும் தேடுவான் வேண்டி அண்ணன் இராம சுப்பையா அவர்கள் 26—11—55ம் தேதியிலிருந்து சுற்றுப் பயணம் துவங்கியிருக்கிறார்கள்.

கடந்த முப்பதாண்டு காலமாக இயக்கத்திற்கு அரும்பாடுபட்டவரும் கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் தளபதியாகி சிறை சென்றவரும் பொது வாழ்வில் எனக்கு ஊக்கமளித்தவருமான அண்ணன் இராம சுப்பையா அவர்களேஇந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதில் தென்றல் பெருமைப் பட நியாயமிருக்கிறது. டிசம்பர்மாத இறுதி வரையில் சுற்றுப் பயணம் நடத்துகிறார்கள். திருச்சி மாவட்டம் அங்கிருந்து சேலம் மாவட்டம், அங்கிருந்து கோவை மாவட்டம்-நீலகிரி-மைசூர்-பெங்களூர் என்று வருகிறார்கள். கிராமங்கள் உட்பட வருவார்கள். நண்பர்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தந்து இந்த முயற்சியில் வெற்றி தேடித் தரக் கேட்டுக் கொள்கிறேன். இயக்கத் தோழர்கள் எல்லோரையுமே அவர்கள் சந்திப்பார்கள்.

பொங்கல் மலர்

தென்றலின் பொங்கல் மலர் அறிவிப்பு வரவில்லையென நண்பர்கள் குறைப் படுகிறார்கள். சென்ற ஆண்டு, பொங்கல் மலர் கிடைக்கவில்லையென எழுதுகிறார்கள். இந்த ஆண்டு பொங்கல் மலர் உண்டு, விலை ஒரு ரூபாய். தலை முறை தலை முறையாகப் பேணிக் காக்க வேண்டிய அளவுக்குச் சிறந்த கட்டுரைகள் அதில் இடம் பெறும். ஏஜெண்டுகளில் முன்பணம் அனுப்புவோருக்கே மலர். தனி மலர் கோருவோர் ஒன்றே கால் ரூபாய் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். தனி மலருக்கு ஸ்டாம்பு அனுப்ப வேண்டிய முகவரி: **த. பி. மலர் "தென்றல்" சென்னை-6.**

பம்பாய்ப் பயணம்

பம்பாய், ஆமதாபாத் தி. மு கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக டிசம்பர் 22-ம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்படுகிறேன். இலக்கிய மன்றங்களிலிருந்து அழைப்பு விடுத்திருக்கும் நண்பர்கள் தயவு செய்து பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளரோடு பேசி, தேதி நிர்ணயித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

பகுதிகள்

இந்த இதழ் இலங்கை பற்றிய செய்திகளையே தாங்கி வரவேண்டியதாகையால் வழக்கமான பகுதிகள் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் இனிய பகுதிகள் பலவும் வெளிவரும். முன்பு அறிவிக்கப் பட்ட பகுதிகள் சில இன்னும் வெளிவரவில்லையென நண்பர்கள் குறைப்படுகிறார்கள். இடக்குறைவு; அடுத்து வரும்; பொறுத்தருள்க!

நீங்கள் செய்ய வேண்டியது

வெண்பாப் போட்டியை இனி எப்படிபுதுமையாக நடத்தலாமென்பதற்கு யோசனை கூறுங்கள். பொங்கல் மலருக்கு யோசனை. மற்றும் புதிய பகுதிகள் பற்றி யோசனை.

இலக்கியப் போட்டி

பரிசு பெற்ற நண்பர்களின் வசதிக்காக இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றோர்க்குப் பரிசளிப்பு விழா 8—1—56 அன்று **காரைக் குடியில்** நடைபெறும். திராவிட முன்னேற்றக் கழக அருமைத் தலைவர்கள் சிலரும், தமிழ்ப் புலவர்களும் கலந்து கொள்வார்கள். விழா கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன. தேதியில் மாற்றமில்லை. வெண்பாப் போட்டியில் கலந்து கொள்ளும் அருமை நண்பர்களில் வசதியுள்ளவர்களும் அன்றைய விழாவுக்கு வந்து சிறப்பித்துத் தர வேண்டுகிறேன்.

இராமனுதபுர மாவட்டத் தோழர்களுக்கு

வரும் ஜனவரியிலிருந்து காரைக் குடியையே எனது தலைமையிடமாகக் கொண்டு அங்கு தங்க இருக்கிறேன். பொதுக் கூட்டங்களுக்கு அழைத்தவுடன் தோழர்களுக்கு அப்போது தேதி தருகிறேன். மாவட்ட முழுவதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிக்கும் ஆக்க வேலைக்கும் எந்தத் துறையில் என்னைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினாலும் ஒத்துழைப்பேன்.

ஜனவரியிலிருந்து எனது காரைக்குடி முகவரி: **கண்ணதாசன், 5. அண்ணாமலைச் செட்டியார் தெரு, முத்துப்பட்டணம், காரைக்குடி.**

குறிப்பாக "தென்றல்" எப்போதும் போல் தொடர்ந்து மிகச் சிறப்பாக வெளிவரும். ஆதரவு தரக் கோருகிறேன்.

— **கண்ணதாசன்**

◎



இசையில் ஆடும் நாகம் — ஈழ நாட்டில்

ஈழ நாட்டில் ...

-1-ம் பக்கத் தொடர்ச்சி-

தமிழ்நாடோடு இணைந்திருந்தது. இங்கே தமிழ், சிங்களம் ஆகிய பாஷைகள் பேசப்படுகின்றன. இந்த நாட்டின் ஜனத்தொகை சுமார் எண்பது லட்சம் என்கிறார்கள். இங்கேயும் மனிதர்கள் வேட்டிதான் கட்டுகிறார்கள், என்பதைக் காண நான் சந்தோஷப்படுகிறேன்........" இப்படிப் பேசிக்கொண்டே போன நான் நிருபர்களைத் திரும்பிப் பார்த்தேன். அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு வழியாக அவர்களிடமிருந்து தப்பி மட்டக்களப்பு நண்பர் கொண்டு வந்திருந்த காரில் ஏறினேன். அது ஒரு 'இல்மென்' கார். அதை ஓட்டுபவர் சின்னத்தம்பி என்பவர். அதன் உரிமையாளரும் அவரே. தமிழ்நாட்டிலிருந்து எந்தப் பேச்சாளர்கள் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினாலும் அந்தக் காரில்தான் போவார்களாம். விமான நிலையத்திலிருந்து நேரே யாழ்ப்பாணம் ஓட்டல் ஒன்றுக்கு வந்து சேர்ந்தோம். போனதும் போகாததுமாக அழகாக இருந்த ஒரு மெத்தையில் சாய்ந்தேன். 'ஓய்வு எடுத்துக் கொள்கிறீர்களா ?' என்று ராசதுரை கேட்டார்.

"இல்லை அப்படி ஒன்றும் பெரிய பயணமல்ல, எங்கு வேண்டுமானாலும் புறப்படலாம்" என்றேன்.

"வேலணை என்றொரு தீவு இருக்கிறது. அங்கே சங்காரவேலு என்ற நண்பர் இருக்கிறார். அரசினர் கல்லூரியில் அவர் படிப்பிக்கிறார். அவர்தான் தமிழ் வாலிபர் சங்கத்தின் முன்னாள் தலைவர்" என்றார் ராசதுரை. "சரி, போவோம்" என்று புறப்பட்டோம்.

யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் பெரும்பகுதி தமிழர்கள் கணவனும் மனைவியுமாக ஆசிரியத் தொழில் பார்க்கிறார்கள். ஏராளமான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஆரம்பச் சம்பளமே சுமார் முந்நூறு ரூபாய் கிடைக்கிறது. ஆசிரியர் அங்கே 'படிப்பிக்கிறவர்' என்று அழைக்கப்படுகிறார்.

வேலணைத் தீவுக்குப் போவதற்கு இடையிலே ஒரு குடாக்கடலைக் கடக்கவேண்டும். சுமார் ஒன்றரை பர்லாங் நீளம் தான் அந்தக் குடா இருக்கும். பாலம் கிடையாது. பெரிய படகுகளில் காரையே ஏற்றி அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுகிறார்கள். எங்கள் காரையும் படகில் ஏற்றிக்கொண்டோம். எங்கள் காருக்கு முன்னால் அதே படகில் ஒரு லாரி நின்றுகொண்டிருந்தது. அந்த லாரி நிறைய வாழைப்பழங்கள். லாரி ஒரு அடி பின்னால் வந்தாலும், எங்கள் காரும், காரோடு நாங்களும் கடலுக்குள்ளே போய்விடுவோம். காரணம் முன்னாலும் அடைப்பில்லை, பின்னாலும் அடைப்பில்லை. இப்படியாக வேலணைக் கரையில் கொண்டுவந்து எங்கள் கார் இறக்கப்பட்டது.

—தொடரும்

வெண்பாப் போட்டி 21

பெண்ணிற்கும் ஏதேனும் ஒரு பொருளுக்கும் சிலேடை அமையும்படி ஒரு வெண்பாஎழுதவும். உதாரணம். "பெண்ணிற்கும் வாழைக்கும்", "பெண்ணிற்கும் மாமரத்திற்கும்"

முடிவு தேதி **17-12-55**

முகவரி :

**வெண்பாப் போட்டி,
தென்றல்
சென்னை-6.**

சொல்லில் அகப்படுமோ?

★ காரை. முத்துப்புலவர் ★

"ஐயா! இலக்கியம் பற்றிப் பேசுங்கள்!"

"இலக்கியம் பற்றி நிறைய எழுதுங்கள்!"

"இலக்கிய நூற்கள் நிறைய வெளியிடுங்கள்!"

—என்றெல்லாம் நண்பர்கள் ஆவலோடு சொல்லும்போது, எனக்கு அளவுகடந்த உற்சாகம் ஏற்படும். காரணம், இலக்கியத்தில் நான் வல்லவன் என்பதல்ல. பத்து ஆண்டுகளுக்கு முன்பேல்லாம், மக்கி மடிந்துவிடுமோ என்று நாம் கவலைப்பட்ட ஒரு துறையில் இன்று நம் மக்களுக்கு இவ்வளவு ஆர்வம் ஏற்பட்டிருக்கிறதே என்பதுதான். இன்று, நம் கண் முன்னுல் இயங்கும் தமிழகம், உண்மையில் இலக்கிய ஆர்வத்தில்—அல்ல; இலக்கிய வெறியில்—மூழ்கித் திளைக்கிறது. சிலம்பும் குறளும், சீவகசிந்தாமணியும், பத்துப்பாட்டும், பதினேண் கீழ்க்கணக்கும் புலவர்களின் பிழைப்புக்கான ஆயுதங்கள் என்கிற மனநிலை மாறி, "அதில் என்ன சுவை, என்ன உருவத்தில் கிடக்கிறது?" என்று ஆராய்ந்தறியும் பண்பு மாணவச் செல்வங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்நேரத்தில், மொழிக்கு வராத இலக்கியத்தின் கதையையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்க்குடியும் அதன் மொழியும், உலகில் வேறு எந்த இனத்துக்கும் மொழிக்கும் இல்லாத பழைமைத் தன்மை வாய்ந்தவை. எனின், இலக்கியமும் அத்தகையதே. மனிதன், குரங்கிலிருந்து உருமாறியவன் என்கிற டார்வின் தத்துவத்தை ஒப்புக்கொண்டு, இலக்கியப் பிறப்பை ஆராய்வோம். மனிதன் என்கிற உருவம் சரியாகக் கிடைக்கும் வரை, 'மனிதன் ஆகப்போகும் குரங்கு' நான்கு கால்களால் தத்தியும் தாவியும் ஆடியும் ஓடியும் திரிந்திருக்கலாம். ஒரு குரங்கின் அந்த ஆட்டத்திற்கும் ஓட்டத்திற்கும் காரணம் என்ன என்பதை, இருதயத்தையே செவியாகக் கொண்டு மற்ற குரங்குகள் புரிந்து, தாங்களும் ஆடியிருக்கலாம்; இப்படி, பேசத் தெரியாத—மொழி இல்லாத—எண்ணங்களுக்கு ஒலிவடிவம் தரமுடியும் என்கிற நினைவே இல்லாத காலத்தில், ஒன்றின் செய்கை மற்றொன்றுக்கு மொழியாக இருந்திருக்கலாம்.—இருந்தது என்கிருர்கள் ஆராய்ச்சியாளர்கள். இன்று தொண்டையிலிருந்து புறப்படும் மொழி, அன்று கை கால் ஆட்டத்திலும் முகபாவத்திலும் புறப்பட்டுக்கொண்டிருந்தது என முடிவு கட்டுகிருர்கள். அப்படிப்பட்ட நேரத்தில்—உலகம் பூராவுக்கும் சைகை—அது தான் செய்கை—தேசீய மொழியாக இருந்தது. அதனுல் யாரும் பேதம் பாராட்ட முடியாத, எல்லை காண முடியாத ஒரு உலக இலக்கியமும் அந்தக் காலத்திலேயே பிறந்தது!

மரத்திலிருந்து ஒரு குரங்கு கீழே விழுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். மற்றக் குரங்குகள் ஓடி வந்து, அதைச்சுற்றி நின்றுகொள்கின்றன. கீழே விழுந்த குரங்குக்குக் காயம் பட்டிருந்தால், அந்தக் காயத்தை மற்றக் குரங்குகள், தங்களது முன்கால்களால்—இன்று கைகள் எனப்படும் கால்களால்—தொட்டுப் பார்த்து கவலை அடைகின்றன. அந்தக் குரங்குகளின் இதயங்கள்,வேறு உணர்ச்சிகளுக்கு இடமளிக்காமல், ஒரே உணர்ச்சிக்கு—சோக கீதத்திற்கு ஆளாகின்றன. இதயங்களின் அந்த நிலையை முகங்கள் பிரதிபலிக்கின்றன. காயம் பட்ட குரங்கு அதைக் காண்கிறது. அதன் முகமும் இப்போது அந்த நிலை அடைகிறது. ஏன்? தன் காயம் வலித்ததாலா? இல்லை. தன் காயத்தால், மற்றக் குரங்குகளின் இதயங்கள் வலிக்கின்றன என்பதை உணருகிறதே அந்த உணர்ச்சியால்!—அன்புப் பெருக்கால்! அப்போது அந்தக் குரங்குக் கூட்டத்தின் மத்தியில் பிறப்பதுதான்—பிறந்ததுதான்—இலக்கியம்!—ஆம்; மனிதன் குரங்காக இருந்தபோதே எல்லை காணு இலக்கியம் பிறந்துவிட்டது. இலக்கியம் சொல்லிலே பிறப்பதில்லை. உணர்ச்சியில் — தோற்ற மாற்றத்தில் தான் பிறக்கிறது. அதனுல் தான் மொழி இல்லாத காலத்தும், இலக்கியம் இருந்தது. படித்து, பதம் பிரித்து அனுபவிக்கும் இலக்கியமல்ல, பார்த்து, உணர்ந்து மகிழும் இலக்கியம். இன்றைக்கு "நான் இலக்கியம் படைக்கிறேன்" என்பவர்களும், கம்பன், இளங்கோ, சாத்தன் அல்லது மில்டன், ஷேக்ஸ்பியர் படைத்தவையே இலக்கியங்கள் என்பவர்களும் போய் பேசுகிருர்கள். இலக்கியத்தை வரிவடிவமாக்கி ஒலிவடிவத்துக்கு உதவி செய்த இவர்கள், இலக்கியத்தை வளர்த்தவர்களே தவிர, படைத்தவர்களல்ல. அது குரங்கும் கிளியும் குயிலும் மயிலும் படைத்தது. இயற்கையின் குழந்தை அது!

கற்பனை, மனத்தின் கண்ணுடி. மனம் உணர்ச்சி விளையாடும் களம். உணர்ச்சி, கண்கள் அடிக்கும் தந்தி. கண்கள், காட்சியைத் தூக்கித் தரும் கருவிகள். காட்சி, காணப்படுவது. காணப்படும் இலக்கு—இடம் அல்லது பொருள் எப்படி இருக்கிறதோ அப்படியே அமர்ந்து சிகையலங்காரம் முதல் பாத அலங்காரம் வரை செய்துகொண்டு மயக்குவதுதான் இலக்கியம். இலக்கியம் இல்லாமல் மொழி வளர முடியாது, ஆனுல் மொழி இல்லாமல் இலக்கியம் வளரும்.

"யான்நோக்கும் காலை
நிலநோக்கும்-நோக்காக்கால்
தானேக்கி மெல்ல நகும்."

—என்ருன் வள்ளுவன். இங்கே மொழி இல்லாமல் ஒரு நாடகம் நடக்கிறது. இதனை இருநூறு பக்கங்களில் விளக்கி மொழிவடிவமாக்கலாம். ஆனுல், படிக்கும் போது அனுபவ உணர்வு ஏற்படாது. கண்டு அனுபவிக்க நடப்பதுதான் இலக்கியத்தின் துவக்கம்.

"கண்ணெடு கண்ணினை
நோக்கொக்கின்-வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல!"

ஆம்—அதில் இலக்கியப் பயன் கூட இல்லை. எதில்? வெறும் வாய்ச் சொல்லில்! மொழியில்! இங்கே, மொழியைக் காட்டிலும் எழுத-சொல்லப்படாத உணர்ச்சி தான் உயர்ந்த இலக்கியமாகிறது. காரணம் இலக்கியத்தின் மழலைப் பருவமாக அது இருப்பதுதான். மொழியில் வெளியிடப்படாத "காட்சி இலக்கியம்" குழந்தை போன்றது. யாரும் கொஞ்சலாம். அந்த அழகை யாரும் அனுபவிக்கலாம். மொழி வடித்த இலக்கியம் பருவமாது போன்றது. வயது வந்தவர்கள்—படித்தவர்கள் தான் சுவைக்கலாம்.

பள்ளி அறையில் ஒரு காதலனும் காதலியும் முதலிரவு துவங்குகிருர்கள். காதலன், காதலியைப் பார்த்து, "கண்ணே! உனக்கு நான் ஒரு முத்தம் தருகிறேன்!" என்று சொல்வதால், முத்தத்தின் சுவையை அனுபவிக்க முடியாது. அதற்கு முத்தமிட்டுப் பார்க்கவேண்டும், வைத்த கண் வாங்காமல், காதலியைப் பார்ப்பதில் ஏற்படும் மகிழ்ச்சி,வாய் திறந்து வர்ணிப்பதில் இல்லை. வர்ணனை தன் திறமையை வெளிப்படுத்துவதாக இருக்குமே தவிர, தன் அனுபவமாக இராது. ஆகவே, மொழியில் வளர்ந்த இலக்கியம், எவ்வளவு உயர்ந்தாலும், சைகையில்—உணர்ச்சியில் பிறந்த இலக்கியத்தின் எல்லையைத் தொட முடியாது.

கடிதம் எழுதியிருக்கிருர் கணவர். ஓராண்டு பிரிந்திருந்தவர், இன்னும் ஏழு தினங்களில் திரும்பப் போகிருராம். அந்தக் கடிதத்தில் இருக்கும் வரி நான்குதான். அது மனைவியின் மனதில் வளர்க்கும் வரிகள் நாலாயிரம்—கனவுகள் நாற்பது கோடி. ஆனுல் அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. சொன்னுல் நாக்குழறும். எங்கேயோ ஆரம்பமாகி எங்கேயோ போய் முடியும். ஏறக்குறைய பைத்தியத்தின் சாயலே படரும்! இங்கே நான்கு வரி மொழி—நாலாயிரம் நாடகம் படைக்கிறது. ஆனுல் அந்த நான்கு வரிக் கடிதம் இலக்கியமாகுமா? ஆகாது! மௌன இலக்கியத்தை மொழி வளர்க்கிறது! ஆனுல் படம் பிடிக்க முடியவில்லை. மௌனம் சென்று உணர்ச்சி வாகனத்தில் ஏறிப் பறந்து வியாபிக்கும் எல்லைக்கு மொழி போகமுடியாது.

ஒருத்தியையோ, ஒரு பொருளையோ கண்டு வர்ணிக்கிற கவிஞன், எவ்வளவோ வர்ணித்து விட்டு, "சொல்லில் அகப்படுமோ?" என்கிருன். "சொல்லவும் கூடுவதில்லை" என்கிருன். "வர்ணிக்க வார்த்தை இல்லை" என்கிருன். இதனை, அவன் கெட்டிக்காரத்தனமாக அழகின் எல்லையைக் கூறிவிட்டதாகக் கொள்ளக் கூடாது. அவனுல் உண்மையில் முடியவில்லை. அவனது மொழி ஆயுதத்திற்கு உண்மையில் அந்தச் சக்தி இல்லை. இன்னும் சொல்வதானுல், தமிழ் உட்பட எந்த மொழிக்கும் அந்த எல்லையைத் தொட்டுக் காட்டும் பலம் இல்லை. இனியும் ஏற்படாது. காரணம், அந்த உணர்ச்சி, சிந்தனைக்கே பிடிபடவில்லையே! அப்புறமல்லவா சொல்ல!

"அவளைத் தொட்டேன். மெய் சிலிர்த்தது" என்கிருன், கவிஞன். ஏதோ அனுபவித்துச் சொல்லி விட்டதாக மகிழ்ச்சியடைகிருன்! ஆனுல்,உண்மையில், மெய்மட்டுமா சிலிர்த்தது? ரத்தம் ஏதோ சூடாகத் தோன்றிற்று. கண் சுற்றிற்று. **புத்தி மழுங்கிற்று!** புத்தி மழுங்கிய நிலையில் உணர்ச்சியின் எல்லையை மொழியால் தொட அவனுல் இயலவில்லை. அந்த மயக்கத்தின் இடையில் அவன் உணர முடிந்த சின்னஞ்சிறிய அசைவைப் பெரிதாக்கிக் கூறிவிட்டுப் புளகாங்கிதம் பெறுகிருன்.

மொழிக்கும் அப்பால் ஒரு இலக்கியம். அது மூல முதல் இலக்கியம். ஈடு இணையற்ற இலக்கியம். இன்றும் என்றும் இயங்கும் இலக்கியம். அது தான் வாய்ச்சொல்லை மூடிவிடும் அளவு வலுப்பெற்ற இயற்கை உணர்ச்சி இலக்கியம்! எல்லாக் கவிஞர்களும் பைத்தியம் பிடித்தவர்கள் மாதிரியே இருக்கிருர்களே ஏன்? காரணம் இதுதான்: அவர்கள் ஏராளமாகக் கண்டார்கள்—உணர்ந்தார்கள் — அனுபவித்தார்கள். சொல்ல நினைத்தார்கள், முடியவில்லை. வார்த்தை இல்லை. வார்த்தைகளைத் தேடிக்கொண்டே இருக்கிருர்கள். அதனுல் பைத்தியம் பிடித்து அதுவும் ஒரு இலக்கியமாக வளர்ந்துகொண்டே வருகிறது.

கவிஞர் கன்னதாசன் எழுதிய
ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி 4-8-0
ஈழத்துராணி 1-0-0
பெரும்பயணம் 1-0-0
கூட்டுக்குரல் 1-0-0
இலக்கியத்தில் காதல் 1-4-0
கண்மணி (தென்னரசு) 1-0-0
அருணோதயம். சென்னை-14

புது மாதிரியான சோபாக்கள் மற்றும் நாற்காலிகள் வர்ண உறுதியுடையது, நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் கூடியது. கவர்ச்சிகரமானவை.



மலிவான விலையில் உங்கள் வீடுகள், தோட்டங்கள் அலுவலகங்கள், ஓட்டல்கள், ஸ்டுடியோக்கள் மற்றும் உபசரிப்பு அறைகள் ஆகியவைகளுக்குப் பொருந்தும்படி கிடைக்கும்.

உங்கள் முழுத் திருப்திக்கு உறுதியளிக்கப்படும்

எம். வாசன்

மவுண்ட் ரோடு, சென்னை-6.

சந்தேகம்

கடல் கடந்த நாடு ஒன்றில்......!

அந்த நகரத்து நீதிமன்றத்திற்கு எத்தனையோ விசித்திர வழக்குகள் வந்திருக்கின்றன. வேலிதாண்டிய வாலிபர் வழக்கு; தாலியறுத்து வீசிய இளம்பெண் தகராறு - இப்படிப் பல விதமான வழக்குகள் அங்கே விசாரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நீதிமன்றம் பொதுமக்களுக்கோர் பொழுது போக்கு மண்டபமாகவே இருந்தது.

ஒரு வழக்கு-அந்த வழக்கு நகர் முழுவதையும் கவர்ந்திருந்தது. வாதியும், பிரதிவாதியும் நாடறிந்தவர்கள் என்பதால் மட்டுமல்ல; வழக்கின் சாரமும் சுவையுள்ளதாக இருந்ததாலேயே அந்த வழக்கு விசாரணையைக் காண நகரமாந்தர் திரண்டிருந்தனர்.

புகழ்பெற்ற தத்துவஞானி ஒருவரால் எழுதப்பட்ட காதல் ஓவியம் ''பிடிசாம்பல்'' திரைப்படமாக்கப்பட்டு அப்போதுதான் வெளிவந்திருந்தது. அந்தத் திரைப்படம் விளம்பரம் பெற்றிருந்த அளவுக்கு அந்த வழக்கைப் பற்றியும் செய்தி பரவியிருந்தது.

அந்தத் திரைப்படத்திற்கும் வழக்கிற்கும் என்ன சம்பந்தம்?

திரைப்படக் காவியத்தின் தலைவனும் தலைவியும்தான் அந்த வழக்கிற்கு வாதிகளாக இருந்தார்கள். திரையுலகின் வைர நாட்களில் கதாநாயகர்கள் நீதிமன்றம் வருகிறார்களென்றால் அங்கே கூட்டம் கூடாமலா இருக்கும்!

மஞ்சள் பத்திரிகையொன்றில் அந்தக் கதாநாயகர்களைப் பற்றி அவதூறாக எழுதிவிட்டதாக வழக்கு. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் மீது அவர்கள் வழக்குத் தொடுத்திருந்தார்கள். ரஸ்ஸல் கதாநாயகன் பெயர். ரெமி அவள் பெயர். வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்த அந்தப் படத்தில் ரஸ்ஸலும், ரெமியும் காதலர்களாக நடித்திருந்தார்கள்.

''ரிஸ்ஸல் ரெமி அட்டகாசம் சகிக்க முடியவில்லை. நகர் முழுதும் அவர்கள் பேச்சுத்தான். கடற்கரையில், ஓட்டல்களில் - எங்கு பார்த்தாலும் அவர்கள் ஜோடி ஜோடியாகத் திரிகிறார்கள். திரைப்படத்தில்தான் ஜோடி என்றால், நடைமுறையிலும் அப்படித்தானா? இரவில் அவர்களுக்கு நகரில் என்ன வேலை? ஒரே காரில் போகிறார்கள்; ரஸ்ஸல்-ரெமி மர்மம் விரைவில் பிரசுரிக்கப்படும்'' இவ்வாறு அந்த மஞ்சள் பத்திரிகையில் பிரசுரித்திருந்ததை எதிர்த்தே அவர்கள் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர்மீது வழக்குத் தொடுத்திருந்தார்கள். பத்திரிகாசிரியர், ரிஸ்ஸல்-ரெமி இருவரும் ஒன்றாக இருந்து சாப்பிட்ட காட்சியையும், பீச்சில் இருந்த காட்சியையும் படம்பிடித்து எடுத்து வந்திருந்தார். நீதிபதி அவைகளைப்பார்த்தார். பிறகு, ரஸ்ஸலையும், ரெமியையும் விசாரித்தார். ''உங்களிருவருக்கும் உறவு உண்டா?''

''ஆம், உண்டு! நெருங்கிய உறவு உண்டு!''

''ஒரே வீட்டில்தான் இருக்கிறீர்களா?

''ஆம், ஒன்றாகத்தான் இருக்கிறோம்!''

''வீட்டில் வேறு யாராவது உண்டா?''

''எங்களைத் தவிர வேலையாட்கள் உண்டு.''

''உங்களிருவருக்கும் எப்போது தொடர்பு ஆரம்பித்தது!''

''பிறந்தது முதல்!''

''குழந்தைகள் உண்டா?''

''எங்களிருவருக்கும் இன்னும் திருமணமே ஆகவில்லை!''

—இந்த இடத்தில் நீதிபதி, திகைத்தார். நெற்றியைச் சுளித்தார். புருவத்தை வளைத்தார்.

''இவ்வளவு நேரம் என்ன சொல்லிக்கொண்டு வந்தீர்கள்'' - நீதிபதி கேட்டார்.

''உங்களது கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு வந்தேன்''-ரஸ்ஸல்

''ரெமி உமது காதலிதானே!''

★ கலை யார்வமிக்க இரு உள்ளங்களை களங்கப் படுத்த முயன்ற வெறிக் குணம் வீழ்ந்துபட்ட தோல்விக் கதை ★

''மன்னிக்கவேண்டும். ரெமி என் தங்கை!''

''தங்கை! 'பிடிசாம்பல்' படத்தில் நீங்கள் இருவருந்தானே காதலர்களாக நடித்திருக்கிறீர்கள்.''

''ஆம்! படத்திலே காதலர்களாகத்தான் நடித்திருக்கிறோம்.''

நீதிபதியின் கண்கள் காரணமில்லாமல் நீதிமன்றத்தைச் சுற்றி, எதிர்க்கூண்டிலே இருந்த பத்திரிகை ஆசிரியரைப் பார்த்தன. பத்திரிகை ஆசிரியர் பொதுமக்களைப் பார்த்தார். பொதுமக்கள் திரைப்படக் காதலர்களைப் பார்த்தார்கள்.

எதிர்க்கட்சி வக்கீல் எழுந்தார். ''கனம் நீதிபதி அவர்களே! இவர்களுடைய பேச்சிலே எனக்கு நம்பிக்கையில்லை. இவர்கள் உடன்பிறந்தவர்கள் என்பதை இவர்களுடைய இரத்தத்தைக் கைதேர்ந்த மருத்துவரைவைத்துப் பரிசோதித்துத்தான் முடிவு கட்டவேண்டும்'' என்றார். நீதிபதியும் அந்தக் கருத்துக்கு இணங்கியவரைப்போல தலையசைத்தார்.

மறுநாள் நீதிமன்றம் கூடியது. முந்திய தினத்தைவிட அன்று கூட்டம் அதிகம். அரசாங்க மருத்துவர், இருவரின் இரத்தத்தையும் தனித்தனியாக எடுத்துப்பரிசோதித்தார். முடிவில் இரண்டுபேர் இரத்தத்திலும் ஒற்றுமை காணப்படவில்லை என்று சொல்லிப் போய்விட்டார். பத்திரிகை ஆசிரியர் முகத்திலேயும், அவர் அமர்த்தியிருந்த வழக்கறிஞர் முகத்திலேயும் வெற்றி ரேகை படர்ந்தது. ரஸ்ஸலும் ரெமியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

அங்கு கூடியிருந்தவர்களில் ஒருவன், ரஸ்ஸல் - ரெமி பார்த்துக்கொண்ட காட்சியைப் பார்த்து 'பிடிசாம்பலில்' இப்படியொரு கட்டம் இருக்கிறது, என்று கூவிவிட்டான். நீதிபதி வழக்கம்போல, அமைதிகாக்க மேஜையைத் தட்டினார். அலையோய்ந்தது.

நீதிபதி, ரஸ்ஸல் ரெமி இருவரையும் பார்த்துப் பேசினார் ''மருத்துவர் உங்கள் இரத்தத்தில் சகோதர உறவு தென்படவில்லை என்று சொல்லிவிட்டார். உங்கள் வாக்குமூலத்தை வைத்து, நம்புவதற்குச் சட்டம் இடந்தரவில்லை. இன்னொரு வழி உண்டு. உங்கள் இருவரையும் பெற்றெடுத்த தாய் வந்து சாட்சி சொல்லமுடியுமா?''

''எங்கள் தாய் இறந்து பத்தாண்டுகள் ஆகிவிட்டன. தந்தை எங்களை நடுத்தெருவில் விட்டுப் போய்விட்டார்''-ரஸ்ஸல்.

நீதிபதி உதட்டை வெளியே பிதுக்கி, தலையசைத்தார். அந்த அசைப்பு திரைப்படக் காதலர்களுக்கு அவர் பாதகமாகத் தீர்ப்புச் சொல்லப்போவதை முன்கூட்டித் தெரிவித்தது. பொதுமக்கள் முகங்களில் சோகம் படர்ந்தது. வாலிபர்களின் உள்ளங்களைக் கிளறும் வகையில் நடந்துகொண்டதாகக் கூறி ரஸ்ஸல் - ரெமி இருவருக்கும் நீதிபதி ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

★

அவர்கள் இருவரும் காதலர்களாக திரைப்படத்தில் நடித்தார்கள். ஆனால் இவரும் உடன்பிறந்தவர்கள். உலகம் இதை நம்பவில்லை. நீதிபதியே நம்பவில்லை. தாய் தந்தையற்ற சகோதரனும் சகோதரியும் ஒன்றாக உலவியதைத் தப்புக்கணக்குப் போட்டு துர்ப்பிரச்சாரம் செய்ததை உலகம் நம்பியது. ஆனால், அவர்கள் தவறு செய்ததாகவோ, ஒழுக்கத்திற்கு கேடு விளைவித்ததற்கோ ஆதாரமில்லை, ஒன்றாக பீச்சில் இருந்து எடுத்த புகைப்படத்தைத் தவிர.

நாடு அவர்களைக் காதலர்களாகவே மதித்துவிட்டது. மருத்துவரும் சகோதர ஒற்றுமையில்லை என்று அவர்களது ரத்தத்தைப் பரிசோதித்துச் சொல்லிவிட்டார்.

உண்மைதான் என்ன?

ரஸ்ஸல்-ரெமி இருவரின் தாய்க்கு இரண்டு கணவன்மார். முதல் கணவரின் மகன் ரஸ்ஸல். இரண்டாவது கணவரின் மகள் ரெமி. ரத்தத்தில் ஒற்றுமை காணப்படாததற்கு அடிப்படைக் காரணம் இதுதான்.

இந்த உண்மை, வழக்கு நடைபெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் தெரியவந்தது.

பத்திரிகாசிரியனுக் கிடைத்த 'சபாஷ்'பட்டம் அன்றோடு பிடிசாம்பலாயிற்று.

—பிறமொழிக் கதையொன்றின் சாரம்.

வேந்தனும் விகடனும்!

ஓர் அரசனிடம் யாரோ ஒருவன் ஒரு குதிரையை விற்க வந்தான். இரண்டாயிரம் ரூபாய் கொடுத்து மன்னன் அந்தக் குதிரையைப் பெற்றுக்கொண்டான். அவனிடம் மேலும் இரண்டு லட்சம் வெள்ளிக் காசு கொடுத்துஅந்தப் பணத்துக்கும் குதிரைகள் வாங்கி வரும்படி அவனை அனுப்பினான்.

பிறகு, ஒரு நாள் அரசன் தன் சபை விகடனிடம் தன் நாட்டிலுள்ள முட்டாள்களின் பெயர்களை யெல்லாம் எழுதி வரும்படி கட்டளையிட்டான். அப்படியே விகடனும் முட்டாள்கள் ஜாபிதா ஒன்று தயாரித்து, அரசனிடம் கொடுத்தான். அதைப் பார்த்ததும் மன்னனுக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. ஏனென்றால், அதில் மன்னனுடைய பெயரை முதல் பெயராக எழுதியிருந்தான் விகடன்.

''ஏன் என் பெயரை முட்டாள்களின் வரிசையில் முதல் பெயராக எழுதியிருக்கிறாய்?'' என்று கர்ஜித்தான் மன்னன்.

''ஊர் பேர் தெரியாத ஓர் அந்நியனிடம் பெருந்தொகையைக் கொடுத்தனுப்பினால் அவன் திரும்பி வருவானோ என்பதை யோசிக்காமல் அவனிடம் இரண்டு லட்சம் வெள்ளிக் காசு கொடுத்தீர்களே! அதனால்தான் தங்கள் பெயரையும் இந்த ஜாபிதாவில் சேர்த்தேன்'' என்றான் விகடன்.

''சரி; அந்த அந்நியன் திரும்பி வந்தால் என்ன செய்வாய்?'' என்று கேட்டான் மன்னன்.

''ஏன்? அவன் வந்துவிட்டால் தங்கள் பெயரை அழித்து விட்டு அந்த இடத்தில் அவன் பெயரை எழுதி விடுவேன்'' என்றான் விகடன்.

மன்னனின் கோபம் சிரிப்பாக மாறியது.

வெளியிட்டது-மஞ்சரி — பாரசீக இலக்கியத்திலிருந்து எடுத்து உதவியவர்: ஏ. அப்துர் ரஹீம்.

இலக்கியங்கள் எந்த அளவிற்கு முதன்மை வாய்ந்தனவோ, அதே அளவிற்கு நாடோடி இலக்கியங்களும் முதன்மை வாய்ந்தனவாக இருக்கின்றன. எழுத்தறியாக் கிராமியக் கவிஞர்கள் எழுத்தறிந்த கவிஞர்களைப் போலவே கவி பாடுகின்றனர். அது பற்றி இங்கே விளக்குகிறார் இலங்கைத் தோழர் எப். ஜி. ஜெயசிங்கம்.

மட்டக்களப்பில் நாடோடி இலக்கியம்

இலக்கியம் என்றதும் பாரதத்தையும் கம்பராமாயணத்தையும் நினைத்த காலம் மலையேறிவிட்டது. இப்போது கிராமிய இலக்கியங்களும் அறிஞர்களின் அகங்களில் காட்சியளிக்கின்றன. இத்தகைய நாடோடி இலக்கியங்கள் கிழக்கு இலங்கையான மட்டக்களப்புத் தமிழகத்தின் பல பாகங்களிலும் மலிந்து காணப்படுகின்றன. பொதுவாகக் கிராமங்களில் ‘கவிகளில்’ வரும் காதல்காட்சிகள் நடைமுறைகளாவதுமுண்டு. இக்கிராமிய இலக்கியச் செல்வங்களை இப்பகுதி மக்கள் “கவி” என்று அழகு நாமமிட்டு அழைப்பார்கள். அன்றாடம் ஆயிரக்கணக்கான பாடல்கள் எழுத்தறியாக் கவிஞர்களாம் கிராமிய மக்கள் மத்தியில் புதுப் புதுப் பாணிகளில் தோன்றிய வண்ணமேயிருக்கின்றன. கிராமிய இலக்கியம் என்றால் கசக்கும் என்றவர்கள் இன்று கரும்பு என்னுமளவுக்கு இலக்கிய உலகம் முன்னேறியிருக்கிறது. கிராமிய கவிகளில்-கவிதை நயம், இசையமைப்பு எல்லாம் இயற்கையாகவே அமைந்துள்ளன. உவமை நயமும் மிகுந்து காணப்படுகின்றது. உதாரணமாக கிராமிய காதல் காட்சிகளிலொன்றையும் அதில் “கவி”கள் பெறும் சிறப்பையும் சிறிது ஆராய்வோம்.

கிராமப்புறத்தில் - இயற்கையின் செழிப்பிலே வளர்ந்த சோலையில் காதலர்கள் சந்தித்து உறவாடுகின்றனர். நெடுநாட்களின் பின்னர் காதலனைக் கண்டதும் காதலியின் உள்ளம் இன்ப உணர்ச்சியினால் விம்மியது. தனது இதயத்தின் துடிப்பை-பருவத்தின் பக்குவமான பதறலை அவனிடம்வெளியிடுகிறாள்.

> ஈரல் துளிரே! இலங்கும்
> அந்தச் சூரியனே!
> மாதாளம்பூவே! மச்சான்
> மனம் நிறையச் சம்மதமா?

என்று அவனது மனவிருப்பத்தை வினவுகிறாள். இப்பாடலில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்துக்கள் கொஞ்சமா? தனது ஆருயிர்க் காதலனை அவள் எவ்வாறு கருதுகிறாள் - வர்ணிக்கிறாள் பாருங்கள்! ஈரல் துளிராக-என் உலகுக்கு ஒளி கொடுக்கும் சூரியனாக (ஆம்! அவள் வாழ்வுக்கு அவன் தானே ஒளி கொடுப்பவன்) மாதுளம் பூவாகக் கருதுகிறாள். அதுமட்டுமா? மச்சான் என்று உரிமையுடன் பாராட்டுகிறாள். தங்கள் காதலர்களை “மச்சான்” என்று அழைப்பது கிழக்குத் தமிழகத்து கிராமியப் பெண்களின் வழக்கமாகும் அவள் தான் அப்படியென்றால் காதலனும் சும்மாவிடுவானா? அவனும் தனது உள்ளத்தை வெளியிடுகிறான்.

> தங்கக்கிளியே! என்
> தாய்மாமன் ஈன்ற கன்றே!
> மையிட்ட கண்ணே! உன்னை
> மறந்திருக்கக் கூடுதில்லை

என்கிறான். தனது காதலியைத் தங்கக்கிளியாக அவன் காண்கிறான். மைபோன்று இழைக்கப்பட்ட அகில் பூசப்பட்ட அவளது கண்கள், அவனது நினைவைத் தடுமாறச் செய்கின்றன. இப்பாடல் காதலின் உணர்ச்சி பாவத்தை எவ்வளவு அழகாக விளக்குகிறது? காதலர் இருவரும் ஈருடலும் ஒருயிருமாயினர். காதலன் அதோடு விட்டானா?

> கடிதம்வரக் காட்டவோ
> கதைத்திருக்க நான் வரட்டோ
> தூதனுப் பட்டோ
> சொல்கிளியே சம்மதத்தை!

என்று அவளிடம் வினவுகிறான். ஆனால் காதலி இலேசில் விடுவாளா? பக்குவமாகப் பதிலளிக்கிறாள் பாருங்கள். இதிலிருந்து கிராமத்து மங்கையர் எவ்வளவு புத்திக் கூர்மையுள்ளவர்கள் என்பதையும் ஊகித்துக்கொள்ள முடியும்.

> நிலவும் எழும்பட்டும்
> நிக்கசனம் போகட்டும்
> அப்பாவும் உறங்கட்டும்
> அப்போ வந்தாச் சம்மதந்தான்

எவ்வளவு யூகம் நிறைந்தது இப்பாடல் என்பதையும் நாம் நன்கறியலாம். இதுபோன்ற இலட்சக்கணக்கான காட்சிகளை நாம் காணமுடியும். இன்னுமொரு பாடல் பாருங்கள். தனது தோழியிடம் தன் காதலனது தோற்றத்தை அப்படியே கூறுகிறாள்.

> நாவற் பழத்திலேயும்
> நல்காயாம் பூவிலேயும்
> காக இறகிலேயும் நல்ல
> கறுப்பு எங்க மச்சான்.

“கறுப்பு” நிறத்தைக் காட்ட அவள் இப்பாடலில் கையாண்டுள்ள உவமைகள் கொஞ்சமல்ல. நாவற் பழம், காயாம் பூ, காகஇறகு இவைகளை எடுத்துக்கூறி இவற்றையும் விட நல்ல கறுத்த மேனியுடையவர் தான் தன் காதலன் என்பதை என்ன அழகாகக் கூறுகிறாள்! ஆகா! எவ்வளவு அழகான பாடல்! எத்தகைய உவமை நயம்! இக்கிராமிய இலக்கியங்களைத் தரும் கவிக் குயில்கள் பெரும் பட்டதாரிகளல்ல. புலவர் பெருந்தகைகளல்ல. கல்வி வாசனையே அற்ற, கையெழுத்துக் கூடச் சரியாக எழுதத் தெரியாத பாமரமக்கள். அன்றாடம் உழைத்து உழைத்து உருக்குலைந்த அவர்கள், தம் வேலைகளில் கண்ணும்கருத்துமாயிருந்தாலும் இடையிடையே கவிகளைப் பாடி மகிழ்வர். வயல் வெளிகளிலே ஏர்கொண்டுழுகின்ற போதிலும், அவர்களைத் தெரியாமலேயே கவிகள் உருவாகின்றன. காதல் கவிகள் உள்ளத்தைத் தொடுவன. இன்ப உணர்ச்சியைக் கிளறுவன. எழுத்தறியாத கவிஞர்களாய்த் திகழும் கிராமிய மக்கள் நீரினிலாடி-நிலவினில் பேசி மகிழ்கின்ற காட்சிகளையெல்லாம் கவிகளாக்கி இன்புறுவர். இலக்கிய வளர்ச்சியில் கிராமிய மக்கள் செய்யும் இச்சேவை போற்ற வேண்டியதாகும் வாய்ப்பாட்டிலக்கியமாக விளங்கும் இக்கிராமிய கவிகளை ஒன்று சேர்த்து அச்சுவாகனமேற்றி தமிழ் இலக்கியப் பணிபுரிய இனியாயினும் தமிழறிஞர்கள் முன்வர வேண்டும். இன்றேல் இலட்சக் கணக்கான இப்பாடல்கள் வழக்கிலிருந்து அருகிவிடக்கூடும் கிராமிய இலக்கியங்களில், இனிமை சொல்லாட்சி செய்யும். புதுமை பூத்து மலரும். உணர்ச்சி கொப்பளிக்கும்.

பெரும்பாலும் இஸ்லாமிய மக்களிடத்தே கவிபாடும் சக்தி அதிகமாயிருப்பதைக் காணலாம். சமீபத்தில் ஒரு இஸ்லாமிய நண்பரைச் சந்தித்தபொழுது கிராமிய கவிகளை ஒன்று சேர்க்க ஆசைப்படுவதாகச் சொன்னேன். உடனே அவர், ஒரு கவி சொல்லுகிறேன் குறித்துக்கொள்ளுங்கள் என்றார்.

> அந்திபட்ட நேரம்
> அசறுக்குப் பின்னால் உங்கள்
> சந்திப்பைக் காணேன்
> சதிமாற்றம் தானுக்கும்

இப்படி நினைத்தவுடனே கவிபாடும் சக்தியுள்ள இயற்கைக் கவிஞர்கள் இப்பகுதியில் நிறையவுளர். இயற்கையழகு மிக்க இக்கிராமிய இலக்கியங்கள் கருத்துச் செறிவு மிக்கவை. கவிபாடும்பொழுது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் பாடுவார்கள். சில விடங்களில் “வாதுக்கவி” என்று கவிப்போட்டிகளும் நடைபெறுவதுண்டு. காதலியைக் காணவருகிறான் காதலன். நெடுநாட்களின் பின்னர் காதலர் கருத்தொருமித்தவராய்ச் சந்திக்கின்றனர். அவளது அழகைப் பருகுவதில் கண்ணும் கருத்துமாயிருக்கிறான் காதலன். காதலி, பேச்சை வேறு பக்கம் திருப்புகிறாள். “இவ்வளவு நாளும் என்னை நினைத்தீர்களா?” என்ற குறும்புக் கேள்வியொன்று அவளது குங்கும அதரத்திலிருந்து வெளிக்கிளம்புகிறது. காதலன், காதல் மேலீட்டால்.

> குஞ்சி முகமும்
> கூர்விழுந்த மூக்காடும்
> நெற்றியில் பூரணையும் என்
> நெஞ்சைவிட் டகலுதில்லை கா!

என்கிறான். இப்பாடல் கருத்தாழம் செறிந்தது. மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள கிராமிய இலக்கியச் சொற்களுள் சிறப்புமிக்கது “கா” என்ற சொல்லாகும். இதன் சிறப்பினை காலஞ்சென்ற விபுலானந்த அடிகளார்,

> “ஆடவர் தோளிலும் கா
> அரிவையர் நாவிலுங்கா”

என்று அழகாகப் பாராட்டியுள்ளார். கிராமிய மங்கையரிடத்தே சிறப்பிடம் பெற்ற “கா” என்ற வார்த்தையே இக்கவியிலும் எடுத்தாளப்பட்டிருக்கிறது. இக்கவியை நினைத்தால் சின்னஞ்சிறு முகமும் அதன் கரிகுழலை மறைக்கும் முக்காடும், நெற்றியை அலங்கரிக்கும் பூரண நிலவுபோன்ற வட்டவடிவமான திலகமும் உடைய மங்கை

(14-ம் பக்கம்)



மட்டக்களப்பு ‘அரசினர் கல்லூரியில்’ ஆசிரியர் கண்ணதாசனுடன் கல்லூரி அதிபர் கந்தையா அவர்களும் மாணவ மாணவிகளும்

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்

செ. இராசதுரை

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் கல்லூரியில் 'தமிழகம்' ஆசிரியர் தோழர் செ. இராசதுரை ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி.

மாணவப் பருவத்தின் விலை எமக்கு நன்றாகத் தெரியும். அதை மாசுபடுத்தும் நோக்கம் எமக்குக் கிடையாது. மாணவர்களின் சிந்தனையையும் செயலையும் பொறுத்திருக்கிறது அவர்களின் எதிர்காலம். உங்கள் எதிர்காலம் நல்ல அஸ்திவாரத்தின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எவரும் உங்களை எளிதில் ஏமாற்றிவிட முடியாதென்பதையும் உணர்கிறேன். ஆகவே எம்மைப்பற்றிப் பேசலாமென்றெண்ணுகிறேன். என்னைப் பற்றிப் பேசுவதானால் என்னைப் பெற்றெடுத்த தாயைப்பற்றி சிறிதளவாவது பேசவேண்டியிருக்கிறது. என் தாயைப்பற்றிப் பேசுவதாயின் அவள் இந்த ஊரில் இன்ன பெயருள்ள தெருவிலே வாழ்ந்த இன்னாருக்கும் இன்னாருக்கும் மகளாகப் பிறந்தவள், அவள் இன்ன ஊரைச் சேர்ந்த இன்னாரைத் திருமணம் செய்து கொண்டாளென்று மட்டுமே சொல்ல முடியும். அவள் என்ன சரித்திரச் சிறப்பு வாய்ந்தவளா நீங்களெல்லாம் தெரிந்திருக்க? அப்படியே இங்கு கூடியிருக்கும் உங்கள் ஒவ்வொருவருடைய தாய்மார்களைப் பற்றிப் பேசுவதாயினும் ஒரு தலைமுறையை அல்லது இரண்டு தலைமுறையைச் சேர்ந்தவர்களை மட்டுமே எடுத்துப்பேச முடியும். அப்பேச்சு அந்தத் தாயின் வயிற்றிலே பிறந்த பிள்ளைகளுக்கும், தாயின் உடன் பிறந்த சகோதர சகோதரிகளுக்கும் இனசன சுற்றத்தார்களுக்கும் பிடிக்குமே தவிர எல்லாருக்கும் பிடிக்காது. நம் எல்லாரையும்-நாட்டிலுள்ள அனைவரையும் பெற்றது ஒரே தாயானால் அவளைப்பற்றிப் பேசுவது அனைவருக்கும் பிடிக்கலாம். எனவே நம்மைப்பெற்ற தாய்மார்களையும், அவர்களைப்பெற்ற தாயையும்பற்றி பேசலாமென்று நினைக்கின்றேன். அந்நினைப்பை "பெற்றதாயும் பிறந்த பொன்னுடும்" என்னும் தலைப்பின் கீழ் பேசலாமென்று முன்வந்தேன்.

பெற்றதாயும் பிறந்த பொன்னுடும் என்றவுடன் உங்களைப் பெற்ற தாயின் உருவமும், பிறந்த நாடான மட்டக்களப்பின் தோற்றமும் உங்கள் கண்களுக்குள் தோன்றியிருக்கலாம். வளைந்து வளைந்து செல்லும் வாவிக் கூட்டங்களும், அவற்றுள் மறைந்து கிடந்து இன்னிசை நாதம் எழுப்பும் நீரரமகளிரின் (Singing Fish) நினைப்பும் தோன்றலாம். யாழ் நூலும் அதை அமைத்த விபுலானந்த அடிகளின் உருவும் திருவும் மனக்கண் முன் நிழலாடலாம். இன்னும் தங்கக் கதிர்களைத் தாங்கமுடியாது தாங்கிக்கொண்டு சரிந்து கிடக்கும் நெற்பயிர்கள், பாளைச்சிரிப்பைக் காட்டிக்கொல்லும் பருவப்பெண்களைப்போல் ஆற்றோரங்களில் ஒய்யாரமாக ஆடி அசையும் தென்னை மரச்சோலைகள், வெற்றிலைக் கொடிக்கால்கள் எல்லாம் இந்நேரத்தில் உங்கள் மனக்கண்முன் தோன்றியிருக்கும். மட்டக்களப்பைப் பற்றிப் பேசுவதானால் அது நம்மில் ஒரு தாயைப்பற்றிப் பேசுவதை ஒப்பதாகும். மட்டக்களப்பு, கொழும்பு, யாழ்ப்பாணம், திரிகோணமலை, கண்டி ஆகிய பல நூறு பகுதிகளையும் தன்னகத்தே அடக்கிய பிறந்த நாட்டைப்பற்றிப் பேசுவது சாலப் பொருந்தும். அதாவது நம்மை ஈன்றெடுத்த தாயையும் ஈழத்து மாதாவையும் பற்றிப் பேசுகிறேன்.

நம் தாயும் தந்தையர்களும் அவர்கள் முந்தையர்களும் பல நூறுண்டு, நீரினில் ஆடி, நிலவினில் பாடி, சோலையில் கூடி மகிழ்ந்த நம் சொந்தத் திருவிடத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப் பார்க்க வேண்டுமென்று ஏன் கூறுகிறேன் என்றால், இந்நாட்டில் அன்று எப்படி வாழ்ந்தோம், இன்று எப்படி வாழ்கிறோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்வதற்காகத்தான். பெற்றதாய் நம்

ஒவ்வொருவருக்கும் எப்படிப் பெரியவளோ, அப்படி அதைவிட மேலான சிறப்புக்கும், மதிப்புக்குமுரியது பிறந்த பொன்னாடு. தாய் இல்லாது நாம் பிறந்திருக்க முடியாது. தாயகமில்லாது அவர்களும் பிறந்திருக்க இயலாது.

பெற்றதாயும் பிறந்த
பொன்னுடும்
நற்றவ வானிலும்
நனி சிறந்தனவே

என்று பெரியார்கள் வாழ்த்திப் போற்றியது அவற்றின் பெருமையைத் தெரிந்ததனாலேயே.

அந்நாட்டின் பூர்வீக வரலாற்றைத் தெரிந்துகொள்ள முயல வேண்டும். அந்நாட்டில் அறம் வளர்த்து, மறம் கடிந்து வாழ்ந்த அறநெறியாளர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் கலையை கண்ணிலும் மேலாகக் காத்து, அதற்கு கலைக்கூடம் கட்டிப் போற்றி வளர்த்த கலைஞர்களையும், காவலர்களையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

அந்நாட்டில் விளைந்த அகிலையும், தேக்கையும், முத்தையும், பவளத்தையும், ஏற்றிக்கொண்டு அலைகடலைக் கிழித்தவண்ணம் உலகமளாவிய வணிகக் கப்பல்களையும், அவற்றுக்குக்காவலாக இருமருங்கும் அணிவகுத்துச் சென்ற போர்க் கப்பல்களையும், அவற்றை ஆக்கிய விற்பன்னர்களையும் அறிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் வளையல்கள் அணியும் வனிதையர்கள், தாம் பிறந்த தாய் நாட்டை அடிமைப்படுத்த போர்ப்படை நடத்தி வந்த எதிரிகள் மீது, வாளெடுத்துப் போர் தொடுத்த வீரச் செயல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் அன்னியன் அரசு ஏற்படுவதானால் அது எங்கள் உயிரற்ற உடம்புகளின் மீதே அமையுமென்று வீர உரைபகர்ந்து வெற்றி அல்லது வீர மரணமென்று போரிட்ட வீரர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அந்நாட்டில் காதலுக்கும் கற்புக்கும் நிலைக்களமாய் வாழ்ந்த பெண்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அந்நாடு நாகரிகத்தில் வாழ்க்கைக்குகந்த வசதிகள் அமைத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்த பெருவாழ்வை அறிந்துகொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளாது வாழ்வது வாழ்வாகாது. நாமும் இங்கு தமிழரென்று சொல்லிக் கொண்டு வாழ்வதிலும் நஞ்சைத் தின்று சாவது சாலச் சிறந்தது.

பாமரராய், விலங்குகளாய்
உலகனைத்தும் இகழ்ச்சிசொல்லப்
பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ?
சொல்லீர்!

என்று பாரதியார் தமிழரென்ற உணர்ச்சியின்றி வாழ்வோரைப் பார்த்துக் கேட்கும் கேள்வியை நாமாவது மாற்ற முயலவேண்டும். அல்லது மாற்றும் பணியை ஆரம்பித்து வைத்தால் எதிர்காலம் அப்பாதையிலே சென்று வெற்றிப் பட்டியலை கையளிக்குமென்று உறுதிகொள்வோம், இதைவிட்டு எதற்கெடுத்தாலும் வெளிநாட்டைப்பற்றிப் பேசுவதும், புகழ்வதும், நம்மில் பலரிடையே நிலவும் பெருங்குறை.

இலக்கியமா, நாகரிகமா, நாவலா, நடையுடைபாவனைகளையடக்கிய பழக்கவழக்கங்களா, வாழ்க்கைக்குகந்த வசதிகளா இப்படி எதற்கெடுத்தாலும் நாம் அந்நிய நாடுகளையே போற்றிப் புகழும் நிலையில் இருக்கிறோம். நம்மிடம் எதுவுமில்லையென்று முடிவு செய்து விடுகிறோம். வெட்கமும், வேதனையும் அளிக்கும் இந்நிலையில் பெருமிதமும், மகிழ்வும் அடைகிறோம். இக்குறைபாட்டால் ஏற்பட்ட கேடுகள் ஒன்றிரண்டல்ல, பலப்பல.

பெற்றதாய் அழகற்றவள் அல்லது விழியற்றவள் அல்லது நகையற்றவள் என்ற காரணத்திற்காக, நாம் பிறிதொரு தாயின் பாலைக் குடித்து வளரத் துணிவோமா? அல்லது இளமை முறுக்கோடு நாமிருக்கும் சமயத்தில் நம் தாய் நரைத்த தலைமுடியோடு - குழி விழுந்த கண்களோடு - கூனிப்போன முதுகோடு - காட்சியளித்தால், அவளைத் தாயென்று சொல்ல நாம் தயங்குவதா? கருவளைப் பாம்புகளைப் போல் சுருண்டு தொங்கும் என்னுடைய மயிர்ச் சுருள்களைப் பார், மாபின் கல்லைப்போன்ற என் கன்னக் கதுப்புகளைக்காண், கறுத்த வண்டைப்போல் துருதுருவென்று துடிக்கும் என் பேசும் விழிகளைப் பார், மூன்றும் பிறைச் சந்திரனைப்போல் வளைந்த நெற்றியைக்காண், முத்துப் பற்களை மூடிவைத்திருக்கும் செக்கச் சிவந்த அதரங்களைப்பார், வல்லிக்கொடியைப்போல் வளையும் என் மென்னுடலைப் பார், இவை எல்லாவற்றுக்கும் மேலாக குயிலின் குரலையும், குழலின் இனிமையையும், மெல்யாழின் நரம்புதனைத் தடவும்போது எழும் மதுர நாதத்தையும் விட இனிய என் வார்த்தைகளைக் கேள். அவற்றில்

(13-ம் பக்கம்)

காட்சி 1.

இடம் : *இராசமாபுரத்தை அடுத்த ஆற்றங்கரை.*

நேரம் : *அந்தி.*

[இளவேனிற்காலம். இளமரக்காவில் வசந்தவிழா கொண்டாடி, நீராட்டுவிழா முடித்து, எல்லோரும் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். சீவகனும் அவன் தோழன் பதுமுகனும் தனிவழியே சென்றுகொண்டிருக்கிறார்கள். கொஞ்சதூரத்தில் குணமாலை என்பாளும் அவள் தோழியும் செண்டு கொண்டு ஆடியபடி சிரித்து, மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்த சீவகன் தோழனிடம்]

சீவ : *பதுமுகா ! அதோ பந்தாடும் அந்தப் பாவையர் யாவர்?*

பது : *பெண்கள் என்பது தெரிகிறது. பிற விவரம் கேட்டால் தான் தெரியும்.*

சீவ : *கொஞ்சம் கேட்டு வா !*

பது : *அக்கரை உள்ளவர்கள் தான் கேட்கவேண்டும். எனக்கு இதில் அக்கரை இல்லை.*

சீவ : *அட பைத்தியக்காரா ! பாரடா அந்தப் பாவையின் ஆட்டத்தை ! பாதம் பூமியில் படாமல் தாவுகிறாள். அவள் பளபளக்கும் மேனியைப் பட்டாடை தழுவித் தழுவிச் சரிகிறது. சரிகின்ற ஆடையை இடக்கரத்தில் தாங்கி வலக்கையால் மட்டும் பந்தினைப் பிடிக்கிறாள். அடாடா ! பந்து அவள் கைக்கு அகப்படாமல் மார்பில் விழுந்துவிட்டதே !*

பது : *போ ! எடுத்துக் கொடு ! அந்த உதவியையாவது செய் ! அதன்மூலம் அறிமுகமாகிவிடு !*

சீவ : *பதுமுகா ! அழகு கொலுவிருக்கும் பதுமையடா இவள் ! கூட இருக்கும் தோழிகூட அதில் குறைச்சல் இல்லையடா !*

பது : *சீவகா ! ஒரே நேரத்திலே இரண்டு பேரைப் பார்த்துக் காதலிக்கும் சக்தி உனக்குத்தானடா உண்டு !*

[இப்போது குணமாலையும் தோழியும் ஆடிக்கொண்டிருந்த பந்து, சீவகன் அருகில் வந்து விழுகிறது. சீவகன் அதைக் கையில் எடுத்துக் கொள்ளுகிறான். குணமாலையும் தோழியும் ஓடி வருகிறார்கள்.]

குண : *ஏய் ! எங்கே ?*

சீவ : *என்ன ?*

குண : *பந்து !*

சீவ : *நீயே ஒரு பந்து ! உன் முகம் ஒரு பந்து ! வந்து...!*

குண : *பார்த்துப் பேசு ! மரியாதையாக என் பந்தைக் கொடு.*

சீவ : *எங்கே ! உன் கையை இப்படிக் கொடு !*

(குணமாலை கைநீட்ட)

சீவ : *"காந்தள் வனம் போனது உனது கைவிரலுக்குத் தோற்றலவோ ?"*

குண : *வர்ணிக்கிறாயா ? என்ன துணிச்சல் உனக்கு ? முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண்ணைப் பார்த்து ஏதேதோ பேசுகிறாய் !*

சீவ : *அதுதானே உலக மகா அதிசயம் ! முன்பின் அறிமுகமில்லாத ஆண்களைப் பார்த்தால் மனதில் ஒன்றுமே தோன்றுவதில்லை. பெண்களைப் பார்த்தால் மட்டும் இமைப்பதற்குள் பலப்பல தோன்றிவிடுகிறது.*

குண : *அதற்கு வேறு பெண்ணைப் பார் !*

சீவ : *(தோழியைக் காட்டி) இவளையா !*

குண : *(அலட்சியமாக) உம் ! குவளை !*

தோழி : *ஏய் ! என்னைத்தான் என்ன நினைத்துக்கொண்டாய் ?*

பது : *(அருகில் வந்து) அதைப்பற்றி நாம் பேசுவோம் ! வா !*

குண : *(தோழியிடம்) ஒன்றும் பேசவேண்டியதில்லை ! வாடி போவோம் ! புதிய பந்து சுட்டிக்கொள்வோம்.*

[என்று போக,]

பது : *சிவகா ! எனக்கும் ஒரு பந்து வரப்போகிறது !*

[என்று சிரிக்க, தூரத்தில் சென்ற குணமாலையும் தோழியும் தோட்டத்திற்குள் புக, கட்டியங்காரன் என்பானின் **'அசனிவேகம்'** என்னும் மதங்கொண்ட யானை அவர்களைத் துரத்திச் செல்லுகிறது. குணமாலையும் தோழியும் பயந்து ஓடுகிறார்கள். சீவகனும் பதுமுகனும் இதைக் கவனித்து வேகமாக ஓடுகிறார்கள். சீவகன் குணமாலையையும், பதுமுகன் தோழியையும் தோளில் தூக்கிக்கொள்ளுகிறார்கள். சீவகன் தன் கைவேலால் யானையைக் குத்திப் பெரும் போர் புரிந்து கொன்றுவிடுகிறான். 'சாய்ந்து கிடந்த யானையின்மீது சால்வையை விரித்து, அதிலேயே மூர்ச்சையுற்றுக் கிடக்கும்' குணமாலையைப் படுக்கவைக்கிறான். குணமாலை கண்விழிக்கிறாள்.]

குண : *ஆ ! யானை !*

சீவ : *இல்லை ! நானே ! மானே ! இறந்து கிடக்கிறது யானை!*

குண : *நீங்கள்தான் கொன்றீர்களா !*

சீவ : *ஏன், நம்பிக்கை இல்லையா ?*

குண : *அதற்கில்லை ! யானையையே இந்தப் பாடு படுத்தியிருக்கிறீர்களே, என்னை ... !*

சீவ : *அட, பைத்தியமே ! கருங்காலிக் கட்டையைப் பிளந்தெறியும் கோடாரி, வாழைத் தண்டுக்கு வளைந்து கொடுக்கும்.*

[குணமாலை நாணத்தினால் தலைகுனிகிறாள். சீவகன் அவள் முக வாய்க்கட்டையைக் கைவைத்துத் தூக்கி,]

சீவ : *உதட்டை இதழ் என்கிறார்கள் மூடர்கள், முழு மலரே இங்கு இருக்கிறது ! கண்ணை மீன் என்கிறார்கள் கவிஞர்கள், ஒரு குளமே இங்கு இருக்கிறது !*

குண : *வேறென்ன இருக்கிறது ?*

சீவ : *கன்னம் இருக்கிறது உண்ண ! சங்குக்கழுத்து இருக்கிறது பின்ன !*

குண : *(சிரித்து) நீங்கள் வீரர்மட்டுமல்ல, கவிஞரும்கூட !*

சீவ : *வீரர்களுக்குக் கவிதையோ, கவிஞர்களுக்கு வீரமோ வராது என்று நினைக்கிறாயா ?*

குண : *(நிமிர்ந்து பார்த்து) இல்லை ! உங்களைப் பார்த்ததும் வரும் என்று தெரிந்துகொண்டேன் !*

சீவ : *கண்ணே ! ஒரு முத்தம் கொடு !*

குண : *சும்மா இருங்கள் ! தோழி பார்க்கப் போகிறாள் !*

சீவ : *அதைப்பற்றிக் கவலைப்படாதே ! அவர்களும் அங்கே அதுதான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

[என்று கூறிவிட்டு மெதுவாக அவளை அணைத்து ஒரு முத்தம் கொடுக்கிறான். குணமாலையின் மேனி சிலிர்க்கிறது: போதைகொண்டவள்போல் மயங்கி இருக்கிறாள்.]

சீவ : *புதிய உணர்ச்சி ! எப்போதும் அதற்குப் போதை அதிகம். குணமாலை ! புறப்படும்போது நான் நினைத்ததில்லை, வழியிலே இப்படி ஒரு பூக்காட்டைச் சந்திப்போமென்று !*

[சீவகன் திடீரென்று எழுந்து]

சீவ : *ஐயோ கருநாகம் !*

குண : *(திடுக்கிட்டு) எங்கே !*

சீவ : *உன் சடையிலே ! ஐயோ மின்னல் !*

குண : *எங்கே !*

சீவ : *உன் இடையிலே ! அன்ன நடையிலே ! வண்ண உடையிலே ! என்றெல்லாம் வர்ணிப்பார்கள் கவிஞர்கள். வெறும் வர்ணனை வீண்வேலை என்று நான் கருதுகிறேன். வா ! கைதொட்டுச் சிலிர்ப்போம் ! மெய் தொட்டுப் பயில்வோம் !*

குண : *(நாணத்தோடு) அத்தான் !*

சீவ : *குணமாலை !*

பது : *(வந்தபடி) இதோ இருக்கிறது மணமாலை !*

[சீவகன் அதைக் கையில் வாங்கி, குணமாலையின் கழுத்தில் அணிகிறான். ஒரு எக்காளச் சிரிப்புக் கேட்கிறது. சீவகன் நிமிர்ந்து பார்க்க, கட்டியங்காரன் நிற்கிறான்.]

கட் : *யானையைக் கொன்றது யாரடா ?*

சீவ : *நானடா !*

கட் : *மரியாதை கொடு !*

சீவ : *அதை நீ கொடுத்துத் திருப்பி வாங்கு !*

கட் : *இது என் பட்டத்து யானை.*

சீவ : *மதம்பிடித்துக் கொல்லவந்தது ! வேலைக் கரம்பிடித்துச் சாய்த்தேன் !*

கட் : *தண்டனை தெரியுமா !*

சீவ : *வாள் எடு ! போர் தொடு ! என்ன தண்டனை, யாருக்கு என்பது தெரிந்து விடுகிறது !*

கட் : *நாடோடி நரியே ! உன்னை நறுக்கித் துண்டாடுவேன் !*

சீவ : *ஒவ்வொருவனும் இப்படித்தான் சொல்கிறான், உதை வாங்குவதற்கு முன்னால் !*

கட் : *(காவலர்களைப் பார்த்து) இவனைப் பிடியுங்கள் !*

சீவ : *(காவலர்களைப் பார்த்து) வேண்டாம் ! காவலர்களே நீங்கள் வீட்டிற்குப் போங்கள், பெண்டாட்டி பிள்ளைகளிருப்பர் உங்களுக்கு !*

[காவலர்கள் அஞ்சி நிற்க, கட்டியங்காரன் வாளேடுத்தல். சீவகனோடு போர் புரிதல். முடிவில் கட்டியங்காரன் ஓடுதல்.]

கண்ணதாசன்

— அடுத்த இதழில் முடியும் —

வேலங்குடித் திருவிழா

8

முந்திய இதழ்களில் :—

[சின்னப்ப பிள்ளை மகள் இந்திராவுக்கும் எழுத்தாளன் பாலனுக்கும் திருமணம் நடைபெற்றது.

இந்திரா, கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். பாலனின் தந்தை சொக்கப்ப பிள்ளையின் விருப்பப்படி எல்லோரும் மாப்பிள்ளை வீட்டிற்குப் புறப்பட்டனர். மணமக்கள் சொக்கப்பரின் காரில் வந்துகொண்டிருந்தார்கள். இந்திராவின் அண்ணன் சுந்தரமும் நண்பர்களும் முன் காரில் சென்றுகொண்டிருந்தனர். அந்தக் காருக்கு முன்னால் ஒரு அழகு மங்கை விழுந்துகிடந்தாள், அப்பெண்ணை சொக்கப்பரின் வீட்டிற்குக் கொண்டுசென்றனர்.

பாலன், அம்பிகா எனும் அந்தப் பெண்ணை இரவு சந்தித்தான். அவளை வீட்டைவிட்டுப் போய்விடும்படி வேண்டினான். அவள் ஒரு கடிதத்தை வைத்துவிட்டுச் சென்றாள். இதை இந்திராவின் தங்கை கமலம் வெளியிலிருந்து கவனித்தாள். பாலன் வெளிச் சென்றபின் கடிதத்தை எடுத்துப் படித்தாள். அதற்குள் திரும்பிவந்த பாலன் அவளிடமிருந்து கடிதத்தைப் பறித்தான். அங்கிருந்து சென்ற அம்பிகா புதுக்கோட்டை சென்றாள். அதற்குள் கமலம் முதலியோர் புதுக்கோட்டைக்கு வந்துவிட்டனர். அம்பிகா கமலத்தின் வீடுசென்று எல்லோரையும் சந்தித்தாள். கமலத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். சுந்தரத்திடமும் பேசினாள். அதற்குள் மங்கையர்க்கரசி அம்பிகாவை 'வெளியே போ' என்று சொல்லி அனுப்பினாள். அவளும் வெளியே சுற்றினாள். சுந்தரமும் அவளைத் தேடி வெளியே சுற்றினான். இருவரும் சந்தித்தபோது போலீஸ் லாரி ஒன்று வந்தது. போலீஸ் அதிகாரி அவர்கள் இருவரையும் போலீஸ் லாரியில் ஏற்றிவந்தார். ஸ்டேஷனில் சப்இன்ஸ்பெக்டர் அவர்களை விசாரித்து அன்று இரவே அவர்களை இரண்டு போலீசாருடன் சென்னைக்கு அனுப்பினார். ரயிலில் சென்றுகொண்டிருந்த போது, சுந்தரம், அம்பிகாவிடம் அவளது வாழ்க்கை வரலாற்றைக் கேட்டான். அவள் தன் தாயாரைப் பற்றியும். தாயார் அவளைப் பட முதலாளிக்குப் பலியிட முற்பட்டதையும், விபரமாகச் சொல்லுகிறாள்.]

"என்ன சொல்வேன்! அதுவரை சமாளித்தேன். அதற்குமேல் சாமர்த்தியமாகச் சமாளிக்கக்கூடிய நிலையில் நான் இல்லை. ஆகவே முதலாளியை விரோதித்துக் கொண்டாலும் கவலையில்லைஎன்றுதீர்மானித்து, அருகிலிருந்த—மலர்வைக்கும்—பித்தளைச் சிலையை எடுத்து அவர் தலையில் ஓங்கி அடித்துவிட்டேன். அவர் மூளை குழம்பி, மூர்ச்சையானார். கதவைத் திறந்துகொண்டு நான் வெளியில் ஓடினேன். ஒரு சந்து திரும்பியதும், அடுத்த தெருவில் வாடகைக் கார் ஒன்று நிற்கக் கண்டேன். காரோட்டி, உள்ளே நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். "ஐயா! ஐயா!" என்று நான் அவனை எழுப்பினேன். எழுந்த அவன், "புறப்படலாமா?" என்றான். "உம்" என்று, நான் சடாரெனக் காரினுள் ஏறிக்கொண்டேன். அவன் முகத்தைத் துடைத்துக்கொண்டான்; சோம்பல் முறித்தான்.

"ஆச்சுதா?" என்றான். நான், "உம்" என்றேன். "நல்லா நடந்துக்கிட்டாரா?" என்றான்—நான் திகைத்தேன். கார் புறப்பட்டது. போகும் வழியிலே அவன், "வரும்போது கையிலே ஏதாச்சும் பணம் குடுத்தாரா?" என்றான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. வாடகைப்பணம் காட்டும் மீட்டரைப் பார்த்தேன். பதினெட்டு ரூபாய்கள் காட்டிக்கொண்டிருந்தது. நான் "நிறுத்து நிறுத்து" என்றேன். காரை நிறுத்தினான். "என்ன இது! பதினெட்டு ரூபாய் காட்டுகிறது!" என்றேன். அவன் திரும்பி என் முகத்தைப் பார்த்துவிட்டு, "சரியாப் போச்சு போ! நீ யாரம்மா எழவு!" என்றான். அவன் ஏதோ ஒரு பெண்ணைக் கொண்டு வந்து விட்டுவிட்டு, திருப்பிக் கொண்டுபோகக் காத்திருந்தானாம். நான் வந்ததும், அவள்தான் வந்துவிட்டாளென்று காரை எடுத்தானாம்!

"அடடா! அந்தப் பொண்ணு காத்துக்கிட்டிருக்குமே!" என்று கூறியபடி காரைத் திருப்பினான். பழைய தெருவுக்கு வந்து சேர்ந்தோம். அங்கே அவன் குறிப்பிட்ட பெண்ணும், அவளைக் குத்தகை எடுத்திருந்த ஐயாவும் நின்றபடி காரை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்து, கார் நின்றதும், நான் இறங்கினேன். காரோட்டியைப் பார்த்து "ஐயா, 'ஏய்யா! நடுவிலெ நீ 'டிரிப்' அடிக்கிறியா! இதுக்கும் நாங்கள்தான் பணம் தரணுமா! முடியாது. நான் பதினைந்து ரூபாய்தான் தருவேன்" என்றார். காரோட்டி, நடந்ததைச் சொல்லிக் கெஞ்சினான். அவனிடம் விடைபெற்றுப் போக நான் நின்றுகொண்டிருந்தேன். திடீரென்று என்னைப் பார்த்த அந்த "விஷக்கலை மன்னர்", மெதுவாகக் காரோட்டியிடம் ஏதோ சொன்னார். அவன் வேகமாக என்னிடம் வந்து, "ஏம்மா! ஐயா பணங்குடுப்பாரு போறியா?" என்றான்.

"சிச்சீ! நீங்களும் மனிதர்களா! மிருகங்கள்!" என்று கூறிவிட்டு, நான் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். ஒரு கல் தூரம் வந்திருப்பேன். பின்னால், கார் வரும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அதே வாடகைக் கார்! நான் சட்டை செய்யாமல் நடந்தேன். அந்தக் காரோட்டி, காரை என் அருகில் கொண்டு வந்து நிறுத்தி, "ஏறும்மா! கொண்டு போய் விட்டுட்றேன்!" என்றான்.

"ஒன்றும் வேண்டாம். நீ பேசாமற்போ!" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, நடந்தேன். காரிலிருந்த அந்தப் பெண் இறங்கி வந்து, "சும்மா வாம்மா! நமக்குள்ளே என்ன! வா!" என்றாள். நான் கண்டிப்பாக மறுத்துவிட்டேன். அவள் காரில் ஏறிச் சென்றுவிட்டாள். சென்னை நகரில் இந்த வேதனைகள் அதிகம். மனிதன் காதலுக்குக் கொடுக்கும் விளக்கத்தைக் கேட்டுவிட்டு, ஒரு பெண் அவனைத் தனியே சந்தித்தால், அவனது விளக்கமெல்லாம் வெறும் வாயலங்காரம் என்பது தெளிவாகும். இதையறிந்தே சில பெண்கள் 'தொழில்' புரியத் துவங்கிவிடுகிறார்கள். அந்தப் பெண்களைப் பார்த்துவிட்டு, ஆடவர்கள், எல்லாப் பெண்களுமே அப்படித்தான் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அதனால், ஆடவர்களின் பார்வையே முழுக்க உருமாறிக் கிடக்கிறது. நல்ல பெண்கள் அந்த நாகங்களைக் கண்டு நடுங்குகிறார்கள். நான் ஒன்று சொல்வேன். பொதுவாக எல்லாப் பெண்களுக்குமே 'ரிவால்வார்' வைத்துக்கொள்ளும் உரிமை கொடுத்துவிட வேண்டும். அவர்கள், எந்த ஆடவரைச் சுட்டாலும் தண்டனை கிடையாது என்று சட்டம் செய்துவிட வேண்டும். "கண்ணடித்தால் காலில் சுடு; கையைப் பிடித்தால் தொடையில் சுடு; கட்டிப் பிடித்தால் மார்பில் சுடு" என்று பாடம் சொல்லித் தரவேண்டும். ஒரு பத்துப் பேர் இப்படிச் சுடப்பட்டாற் போதும், பிறகு பெண்கள் பயமின்றித் தெருவில் நடக்கலாம்.

—இப்படி அவள் நிறுத்தியதும், சுந்தரம், "அதுவும் நியாயந்தான். உயிருக்கு ஆபத்து என்றால்தான், மனிதன் சில விஷயங்களில் துணியப் பயப்படுகிறான்!" என்றான். அம்பிகா தொடர்ந்தாள் :

வேகமாக நடந்து வந்துகொண்டிருந்த நான் அந்த வேகத்திலேயே வீடுபோய்ச் சேர்ந்துவிடலாமென்று தொடர்ந்து நடக்க ஆரம்பித்தேன். கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு பயம் என் நெஞ்சைக் கவ்வியது. வீட்டுக்குப் போனதும் தாய்க்கு என்ன பதில் சொல்லுவது? கற்பைக் காத்துக்கொண்டேன் என்று சொல்லுவதா? நான் கண்ணகியின் வம்சா வழியென்று வீரவசனம் பேசுவதா? தகராறு செய்துகொண்டு வீட்டைவிட்டு வெளியேறுவதா?-என்றெல்லாம் என் மனது இருள் அலைகளை எழுப்ப ஆரம்பித்தது. எப்போது ஒரு தாய் தானே மனப்பூர்வமாகத் தன் மகளைப் பலியிடத் துணிந்தாளோ அப்போதே அவளுக்கும் அவள் மகளுக்குமுள்ள பந்தம் அறுந்துவிட்டது. மகள் என்பது, உயிரும் பகுத்தறிவும் உள்ள உருவம் என்பது மறைந்து, விற்கப் படவும், வாங்கப்படவும் கூடிய

ஒரு பொருள் என்கிற எண்ணம் ஒருதாய்க்கு வந்த பிறகு அவளை 'அம்மா' என்று அழைப்பதுகூட வெட்கங்கெட்ட செயல். அதற்கு மேல் வாதாடுவதும் பாச உணர்ச்சி காட்டுவதும் முழுக்க முழுக்க வீண்வேலை-இப்படிச் சிந்தித்த நான் ஒரு விளக்கின் அடியில் நின்றேன். என் மூளை குழம்பியது. ஊரிலே அனாதைகள், ஆதரவற்றவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள்கூட தங்களுக்கென ஒரு ஒதுக்கிடத்தைத் தேடி உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்ட நான், தெரு விளக்கினடியில் நின்றுகொண்டிருந்தேன். எதிர்த்த தெரு மேடையில் வரிசையாகத் தொழிலாளர் குடும்பங்கள் தூங்கிக்கொண்டிருந்தன. வேறு நேரமாயிருந்தால் பாவம் இந்தத் தொழிலாளர் என்று பரிதாபப்பட்டிருப்பேன். ஆனால்அப்போதுநானிருந்தநிலையைக் காட்டிலும் அந்தத் தொழிலாளர்களின் நிலை மிக உயர்ந்ததாகத் தோன்றிற்று எனக்கு. நிம்மதி! மனிதன் சுற்றி அலைவதும் சொத்துத் தேடுவதும் அதற்காகத்தானே! கோடி ரூபாய் தருகிறேன் உன் நிம்மதியை எனக்குக் கொடுத்துவிடு என்று கேட்டால் ஓடிவிடுவானே மனிதன். ஆம், வாழ்க்கையின் மூலாதாரமே நிம்மதிதான். எனக்கு மட்டுமல்ல. இந்தச் சமுதாய அமைப்பில் எந்தப் பெண்ணுக்குமே அது இல்லை. இதய ஆசைகளிலிருந்து இறைச்சி ஆசைக்குத் தாவிக்கொண்டிருக்கிறது நமது சமுதாயம். பணக்காரர்களுக்குக் கற்புத் தேவையில்லை. ஏழைகளின் கற்புக்குப் பாதுகாப்பில்லை. அனாதைகளின் கற்புக்கு மரியாதை இல்லை. அவர்கள் தெருமேடையில்தான் இல்லற இன்பம் காண்கிறார்கள். உலக நாடுகள் எதிலேயும் இல்லாத இந்த இழிந்த தன்மை இன்று நமது நாட்டின் ஏகபோக உரிமை. "கற்புக்கரசி கண்ணகி பிறந்த நாடு; கனகவிசயன் தலையிலே கல்லேற்றிக் கொண்டு வந்த நாடு; மானம் ஒன்றையே பெரிதென வாழ்ந்தனர் மறவேந்தர். மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்......" அடாடா நாம் சொல்லிக் கொண்டிருப்பதற்கு முன்னோர்கள் தந்து விட்டுப் போன வார்த்தைகளைப்போல உலகத்தில் வேறு யாருக்கும் வார்த்தைகளில்லை. ஆனால் அவர்கள் எல்லோருமே நம்மைக் காட்டிலும் மானத்தோடு வாழ்கிறார்கள்.-நான் எங்கேயோ போகிறேன். ஆம், அன்றைய நிகழ்ச்சியை நான் சொல்லத் துவங்கும்போது இதுபோன்ற எண்ணங்கள்தான் என் இதயத்தைத் தாக்குகின்றன. சிறிது நேரம் அங்கேயே குழம்பிக் கொண்டிருந்த நான் பழையபடி அங்கேயே நடக்க ஆரம்பித்தேன். சிந்தனை குழம்பும்போது நின்றும், தெளியும்போது நடந்தும் என் கால்கள் சென்று கொண்டிருந்தன. வீட்டுக்குப் போகவில்லை. நேராக மெரீனா பீச்சுக்கு வந்து சேர்ந்தேன். சென்னையிலே பலகாலம் இருந்தும் அன்றைக்குத்தான் மெரீனா பீச்சில் ஒரு வேடிக்கையைக் கண்டேன். தெருமேடைகளில் தூங்குகிறவர்களுக்கு நாங்கள் இளைத்தவர்களல்ல என்பது போல அங்கேயும் பலபேர் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.



நம்மைவிட அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்கள் நாலாயிரம், பதினாயிரம் என்று என்னையே நான் திருப்திப்படுத்திக் கொள்ள முயற்சித்தேன். கடற்கரையிலிருந்த சிமிண்ட் நாற்காலியில் சாய்ந்தேன். உடலுக்குக் கொஞ்சம் ஓய்வு. கண்களை மூடினேன். பொழுது விடிந்தது. மனித நடமாட்டம் தொடங்கியது. ரோமாபுரி வரை போய் வியாபாரம் செய்தவர்களின் பரம்பரையினர் கடற்கரைத் தூக்கத்தை முடித்துக்கொண்டு தாங்களும் நடக்க ஆரம்பித்தனர். நானும், அங்கிருப்பது சரியல்ல என்றெண்ணி எழுந்து நடந்தேன். ராணிமேரி கல்லூரி விடுதியருகில் வந்தேன். அங்கே சில பெண்கள் அப்போதுதான் எழுந்து பல்துலக்கிக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் ஒரு பெண் "இவள்தான் அன்று ஆடியது" என்றாள். எனக்கு என்னவோ போலிருந்தது. அன்று ஆட்டத்திற்கு அவளும் வந்திருந்தாள் போலிருக்கிறது. நான் அவளைப் பார்த்துச் சிரித்து வணங்கினேன். அவளும் வணங்கி என்னை அழைத்தாள். அருகில் சென்றேன்.விடுதிக்குள் கூட்டிக் கொண்டு போனாள். தோழிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். என் ஆட்டத்தைப் பாராட்டினாள். பாராட்டுதலைக் கேட்டு ரசிக்கும் மனநிலையா எனக்கிருந்தது! வேண்டாத நண்பருக்கு வணக்கம் செலுத்தும்போது சிரிக்கும் அசட்டுச் சிரிப்பை அந்த நேரம் வெளிப்படுத்தி வைத்தேன். "அதிகாலையில் இப்படி எங்கே போய்வருகிறீர்கள்?" என்று கேட்டாள். அவசரத்தில் சொல்லக்கூடிய கதையா அது! "அது ஒரு சம்பூர்ண ராமாயணம் என்றேன்." அவள் திகைத்தாள். உடனே நான் "ஏன் அந்த வார்த்தையைச் சொன்னோம்" என்று வருந்தினேன். அதன் பலனாக நான் முழுக்கதையும் சொல்ல அவசியம் ஏற்பட்டுவிட்டது. எப்படியோ விக்கி, விம்மி, திக்கித் திணறி, சொல்லிமுடித்தேன். அந்தப் பெண்கள் எல்லோருமே எனக்காகப் பரிதாபப்பட்டார்கள். அதிலொருத்தி மிகவும் அனுதாபத்தோடு, "நீ எங்களுடனேயே இருந்துவிடு. எங்களோடு படிக்கிறவர்களில்ஒருத்தி தியாகராய நகரில் இருக்கிறாள். அவள் வீட்டிலேயே நீ தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றாள். நான் சம்மதித்தேன். பிறகு பலகாரம் கொண்டுவந்தார்கள் சாப்பிட்டேன். சாப்பிட்டு முடித்ததும் அந்தப் பெண் ஒரு வாடகைக் கார் கொண்டு வந்தாள். இருவரும் தியாகராய நகருக்கு வந்தோம். கார் திரும்பத் திரும்ப, என் மனதிலே பயம் அதிகரித்தது. கடைசியாக ஒரு தெருவுக்கு வந்ததும் என் உயிரே நின்றுவிடும் போலிருந்தது. ஆம்; எங்கள் தெருவே தான் அது. சரியாக எங்கள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டினருகில் காரை நிறுத்தினாள். நான் சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே மெதுவாக இறங்கி அவள் பின்னால் உள்ளே சென்றேன். அந்த வீட்டில் அந்தப் பெண் மட்டும் தனியாக இருந்தாள். அவளிடத்தில் என்கூட வந்த பெண் என்னை அறிமுகப்படுத்தினாள். உடனே என்னைப் புரிந்து கொண்டவளைப்போல அவள் சிரித்தாள். மூன்றாவது வீடு. சினிமாக்காரி மகள், தெரியாமலா இருக்கும்? நானும் பல விபரங்களையும் அவளோடு பரிமாறிக் கொண்டு நான் இங்கே இருப்பது எங்கள் வீட்டுக்குத் தெரியக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டேன். அவள் சம்மதித்தாள். அன்று முதல் என் சிறை வாழ்க்கை தொடங்கிற்று. பிறகு அந்தப் பெண்கள் எல்லோரும் கல்லூரிக்குச் சென்றுவிட்டார்கள். கதவைத் தாளிட்டுக்கொண்டு நான் நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தேன். நிம்மதி! அது கொஞ்ச நேரம் எனக்கும் கிடைத்து விட்டது.நன்றாகத் தூங்கினேன். நடுப்பகலில் கண்விழித்தேன். முகத்தை அலம்பிவிட்டு தற்செயலாகச் சன்னல் வெளியே எட்டிப்பார்த்தேன். அங்கே-தெருவில் பாலன் போய்க் கொண்டிருந்தார். மெதுவாக அவரைக் கைகாட்டி அழைத்தேன். கதவைத் திறந்தேன். அவர் உள்ளே வந்தார். "எங்கிருந்து வருகிறீர்கள்" என விசாரித்தேன். என் வீட்டிற்குத் தான் போய் வந்தாராம். அங்கே என் தாய்க்கும் முதலாளிக்கும் பெரிய சண்டை என்று சொன்னார். வேறு என்ன நடக்கும்? கிளி பறந்து போய்விட்டால் கூண்டைப் போட்டு உடைக்கிறான் மனிதன். பாலன் என்னைப் பற்றியும் விசாரிக்க ஆரம்பித்தார். எத்தனை பேரிடம் தான் கதையைச் சொல்லிக் கொண்டிருப்பது! எழுதியே கொடுத்துவிடலாமா என்று கூடத் தோன்றிற்று எனக்கு. நான் ஒரு வழியாகச் சொல்லி முடித்தேன். நா வரண்டது. தண்ணீர் குடிக்க எழுந்து சென்றேன். நாற்காலியிலிருந்த கண்ணாடிக் கோப்பையை எடுத்த போது குப்புறக் கவிழ்ந்துகிடந்த புகைப்படம் ஒன்று திரும்பி விழுந்தது. கவனித்தேன். என்ன ஆச்சரியம்?

தொடரும்

விவேகிகள் தேவை !

தோகை, உன் கடிதம் கிடைத்தது. தோழி யோகாம்பாளின் திருமணத்திற்குப் போய்விட்டு வந்திருப்பாயென்று எண்ணுகிறேன். யோகுவின் திருமணத்திலே கலந்துகொண்டது உனக்கு எவ்வளவுதான் இன்பமாயிருந்தாலும், அந்தத் திருமணம் உன் உள்ளத்திலே எந்த அளவுக்கு கிளர்ச்சி செய்திருக்கும் என்பதை நான் நன்கறிவேன். யோகு உன்னோடு படித்தவள், உன்னோடு ஓடி ஆடி விளையாண்டவள். கட்டுப்பாடு மிக்க கல்லூரியில் படித்தாயே ஒருகாலத்தில், அப்போதெல்லாம் உனக்குஅடிக்கடி ஆறுதல் சொல்லி ஊக்கமூட்டிய அருமைச் சகோதரி யோகு. அவள் வாழ்க்கைத்தோணியில் காலெடுத்து வைத்துவிட்டாள். அதை நினைத்து ஏக்கமுற்றிருப்பாய். உனது பெற்றோர்களை நிந்தித்திருப்பாய். "சாதகம், சாதகம் என்று உளறி என் வாழ்வைச் சாம்பலாக்கப் பார்க்கிறார்களே" என்றுகூட வாய்விட்டுச் சொல்லியிருப்பாய். பெண்களின் உள்ளம் ஏங்கத் துவங்கிவிட்டால் அப்படித்தான் புலம்புவார்கள்; புழுவாகத் துடிப்பார்கள். அதில் தவறொன்றுமில்லை. திருமணந்தானே பெண்களுக்கு வாழ்க்கையின் நுழைவுவாயில். தோகை மங்கல வாத்தியத்தையும், கல்யாண ஊர்வலங்களையும் பார்த்து நீ அடிக்கடி வேதனைப்படுவாயென்று தெரிந்துதான் உனக்கு இப்போது தொடர்ந்து கடிதமெழுதத் துணிந்திருக்கிறேன். என்னுடைய கடிதம் உனக்கு ஆறுதலளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அன்றாடம் நாட்டிலே நடைபெறும் புதுமையான நிகழ்ச்சிகள், அரசியல் நிலவரம் இவைகளைப் பற்றித்தான் நான் உனக்குச் சொல்லிவருகிறேன். அன்புகொண்டோரின் சொல்தான் நெஞ்சிலே ஆழப்பதியும். அகிலத்தின் பால் அக்கறையற்றவரையும் அன்புள்ளத்தால் இழுத்துவிட முடியும். உலக வரலாற்றில், ஆக்ஞைகளால் நிறைவேறிய காரியங்களைக் காட்டிலும், அன்புக் கட்டளையால் வெற்றியடைந்த சாதனைகள்தான் அதிகம். அந்த நம்பிக்கையின் பேரிலேதான் எனக்குத் தெரிந்த விஷயங்களை, நாட்டுப்புறத்திலே இருக்கும் கூண்டுக்கிளிக்கு எழுத ஆரம்பித்திருக்கிறேன். கடந்த இரண்டாண்டு காலமாக, நாட்டையாண்டுகொண்டிருக்கும் நமது சர்க்கார், மாணவர்களை எதிர்கால ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தும் நோக்கோடு சிலபல பணிகளை மேற்கொண்டிருப்பதை நீ அறிவாய். மாணவர்கள் பிற்காலத்தில் பயன்படுவார்கள் என்ற உண்மையை இப்போதாவது இந்த சர்க்கார் உணர்ந்ததே அறிவுடைமை என்றுதான் நான் என் உள்ளத்தைச் சாந்திப்படுத்திக் கொண்டேன். மாணவர்கள் யாராலும் தீண்டப்படக் கூடாதவர்கள், புத்தகத்தில் எழுதியிருப்பவைகளை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதற்கென்றே ஆண்டவனால் ஒதுக்கப்பட்டதுதான் இளமைப் பருவம் என்றெல்லாம் எண்ணிய காங்கிரஸ் சர்க்கார் இப்போது மாணவர்களைப் பற்றி ஏதோ ஒரு நல்ல முடிவுக்கு வந்தது பற்றி மகிழ்ச்சிதான். ஆனால்...?

மாணவர்களை சர்க்கார் எதற்குப் பயன்படுத்துகிறது? தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்கிறதா? சமைத்த மீனின் சுவையைப் புதிதாக உணர்ந்தவர் பச்சைமீனைப் பிடித்துத்தின்றதைப்போல 'மாட்சிமை தங்கிய' பாரதப் புதல்வர்கள் மாணவர்களைத் துன்புறுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். படித்த மாணவர்களை, படிக்க வசதியற்று வாழ்வை கடுமையான காட்டு உழைப்புக்குப் பக்குவப்படுத்திக்கொண்டோர் செய்யவேண்டிய வேலைகளில் போட்டு வதைக்கிறார்கள். மொட்டவிழா முல்லை அரும்புகளை கற்சிலைக்குப் போட்டா அழகு பார்ப்பது! அதுபோல, போலீசார் செய்யவேண்டிய கைகாட்டி வேலையை மாணவர்களைவிட்டுச் செய்யச் சொல்கிறார்கள். தோகை, 'புவியாளும் பூமான்'களின் புத்திசாலித்தனத்தைப் பார்த்தாயா? ஆயிரக்கணக்காக பணத்தை விரயம் செய்து படிக்கும் மாணவர்கள், பட்டம்பெற்று போலீஸ் உத்தியோகத்திற்கா வரப்போகிறார்கள்? போலீஸ் பயிற்சி கொடுக்கிறார்களே ஏன்? இரண்டுகிழமைகளுக்குமுன் சென்னையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாட்டில் எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் இவ்வாறுதான் குறிப்பிட்டார்கள். 'இந்த நாட்டை ஆண்டுகொண்டிருக்கும் 'சுதந்திர வீரர்'களுக்கு எதை, யாரை, எங்கே, எப்படிப் பயன் படுத்துவது என்ற திறமையில்லை' என்பதை அண்ணா அவர்கள் அன்று சுட்டிக் காட்டினார்கள். அண்ணாவைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே! பிறரிடம் காணப்படும் குற்றங்களை மட்டும் சொல்லிவிட்டுப் போகும் தலைவரல்ல அவர். குறைகளுக்குப் பரிகாரம் சொல்லாமல் இருக்கவும் மாட்டார். 'உலகின் சிந்தனையாளர்களைப்பற்றி முச்சந்தியிலே நின்று பிரச்சாரம் செய்ய வேண்டியவர்கள் மாணவர்கள்' என்று அண்ணா அவர்கள் கூறினார்கள். நீ என்ன நினைக்கிறாய்? இந்த நாட்டு மக்கள் மாணவர்களிடம் எதிர்பார்ப்பது என்ன? போலீஸ் உத்தியோகமா? புரட்சிப் பிதாக்களின் வரலாறுகளா?

தோகை, சக்தியைப் பயன்படுத்திக்கொள்ளத் தவறியதால் காங்கிரஸ் கட்சி எவ்வளவு பலவீனம் அடைந்திருக்கிறது என்பதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. காங்கிரஸ் கட்சியின் உள் ரகசியங்கள் பலவற்றை என்னைக் காட்டிலும் நீ நன்கு அறிந்துகொண்டிருப்பாய். எந்தக் கட்சியிலேயும் ஆற்றல் படை அறிவுப்படை என இரண்டு உண்டு. ஆனால் காங்கிரஸ் கட்சியிலே மட்டும் அறிவுப் படையை வளர்க்க அதனுடைய தலைவர்களே தவறிவிட்டார்கள் என்றுதான் சொல்வேன். வெள்ளையர் வெளியேறியபின் நிர்வாகத்துறையில் காங்கிரசார் நியமித்த எந்த நிர்வாகியும் திறமை பெற்றவராக இருந்தார்களா? நிச்சயமாக இல்லை. ஒரு நல்ல நிதிமந்திரி இதுவரை டில்லி மத்திய சர்க்காருக்கு கட்சியின் சார்பிலே கிடைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியிலே, நிதித் துறையைக் கவனித்துக்கொள்ளும் திறன் படைத்தோர் இருந்திருந்தால் ஒரு ஆர். கே. எஸ், ஒரு மாத்தாய் வந்திருக்க முடியுமென்று கருதுகிறாய்? 'நிதிநிர்வாக பூஜ்ய'த்தைக் காங்கிரசார் தங்களுடைய ஜனநாயகத்திற்குப் பயன்படுத்திக்கொண்டார்கள். எல்லாக் கட்சியினருக்கும் வேலை கொடுக்க எண்ணியே சண்முகனார் போன்றாரை அழைத்துக்கொண்டோம் என்று சொன்னார்கள். இந்த ஜாலவித்தையை நாங்கள் அன்றும் நம்பவில்லை என்றும் நம்பப்போவதில்லை. தோகை, இதையெல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன்? காங்கிரஸ் கட்சி, வீரர்படையைத் தயாரித்ததே தவிர விவேகிகள்படையைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. தி. மு. கழகம் அதை நன்கு உணர்ந்திருக்கிறது. ஆற்றல் படை—அதோடு அறிவுப்படை இரண்டையுமே தயாரித்துக்கொண்டு வருகிறது. வீரர்களைக் கொண்டு வாங்கப்படும் சுதந்திர சாசனத்தை விவேகிகளின் துணைகொண்டுதான் பாதுகாக்க முடியும் என்பதை நாங்கள் அறிவோம். யார், அந்த விவேகிகள்? திராவிடத்தின் செல்வங்கள்! கூர்வேல்கள்! இன்றைய ரோஜா மொட்டுகள்! மாணவர்கள்! அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத சர்க்காருக்கு நவ 19-ல் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு வழிவகுத்துக் காட்டியிருக்கிறது. தோகை, இந்தக் கடிதம் உனக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். ஏனென்றால் நீ காங்கிரசார் வட்டாரத்தில் உலவுகிறாய். சொல்ல வேண்டியவர்களிடத்தில் சொல்வாய்-எங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளாமலே, எங்களை எட்டிக்காயென ஒதுக்கிட நினைக்கும் 'பூச்சாண்டி காட்டி'களுக்கு நீ எடுத்துச்சொன்னால்தான் எதிர்க்கட்சிகளின் அவசியத்தை அந்தச் சுகவாசிகள் உணர்வார்கள். இந்த உதவியைச் செய்! தாயகத்தின் விடுதலையால் உன் தொண்டு புனிதமடையட்டும்.

— தென்னரசு



ஆசிரியர் கண்ணதாசனுக்கு இலங்கை-மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத்தின் சார்பாக தமிழகம் ஆசிரியர் திரு சே. இராசதுரை வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கிறார்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர்கல்லூரியில் ஆசிரியர் கண்ணதாசனுடன் திருமதி திரவியம் ராமச்சந்திரன் அவர்களும் மாணவிகளும்.

சுகம் தேடிகள்!

பொன்னிற மேனியிலே பட்டுடை அணிந்துகொண்டு அந்த நகரத்து அரசி அரண்மனையைவிட்டுப் புறப்பட்டாள். அவள் அணிந்துகொண்டிருந்த காலணிகள் மிகவும் அழகியதாக இருந்தன. அரண்மனையைவிட்டு வெறுத்துச் சென்றாலும் அழகிய அணிகளையும் பட்டுடைகளையும் வெறுத்தொதுக்க முடியவில்லை போலும். ஊரின் எல்லையோரத்தில், நகரத்துக் கூச்சலற்ற அந்தப் பகுதியிலே சென்றுகொண்டிருந்த நாடோடிகளுடன் இணைந்து அவர்களுடன் வாழ விரும்பினாள்.

"விரிந்து கிடக்கின்ற உலகெங்கும் பறந்து திரியும் அழகிய மக்களே! நானும் உங்களுடன் வருகின்றேன். என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். நாள்தோறும் பார்த்தவர்களையே பார்த்து, பழகியவர்களுடனேயே பேசி, தினம் அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும் வாழ்க்கையே வெறுத்துவிட்டது. வண்டியில் செல்லும்பொழுது ஒரே விதமாக உட்கார்ந்திராமல் மாறி மாறி அமர்ந்தால்தான் உடல் வலி தெரிவதில்லை வாழ்க்கையும் அப்படித்தான். மாற்றங்கள் பல இருந்தால்தான் களைப்புத் தெரியாமல் இருக்கிறது.

"அரண்மனையிலே உள்ள பிரபுக்கள் தங்கள் அலுவலகங்களிலே உள்ள அறைச்சுவர்களையன்றி அவர்கள் வேறு உலகத்தையே கண்டதில்லை. நீங்களோ, இசையெழுப்பும் பறவைகளின் இனிய கானத்தைச் சுவைத்தபடி எங்கெங்கும் சுற்றித் திரிந்து இன்பமாக வாழ்கிறீர்கள். அரசியற் தொல்லைகளால் அல்லற்பட்டு எங்களுக்கு, வாழ்க்கையே ஓர் தீர்க்கமுடியாத பிரச்சினையாக இருக்கிறது. நீங்கள் வாழ்க்கையினை ஒரு விளையாட்டாகக் கருதுகிறீர்கள். உங்களின் வாழ்வு எனக்கும் கிட்டுமாறு என்னை இட்டுச் செல்லுங்கள். அன்புள்ளம் படைத்தோரே! என்னை அழைத்துச் செல்லுங்கள். மறுக்காதீர்கள்!"

"அழகிய அரசியே! நீ வருவதானால் வா! ஆனால் சிந்தித்து ஒரு முடிவுக்கு வா! உடன் அழைத்துச்செல்கிறோம். ஆனால், தொல்லைகளை எண்ணிப் பார்த்துத் தாங்கிக்கொள்ள முடியுமா?" வா! வசந்த காலத்தில் புள்ளினங்களின் இனிய இசையைச் சுவைத்தபடி இயற்கையின் திருக்கோலத்தைக் கண்டு ஆனந்தமடையலாம். ஓடைகள் மலைகளினின்றும் விழும் "சலசல" வெனும் ஒலி இன்பம் பயக்கும். உண்மைதான். மாரிக்காலத்தில் குளிரைத் தடுக்கப் போதிய உடையின்றி வாடும்போது நீ, ஏன் வந்தோம் என எண்ணிக் கலங்குவாய். பணியாட்களின் உதவியுடன் காலணி கொண்டு அரண்மனையைச் சுற்றிவந்த நீ, காடுகளில், வயல் வெளிகளில், கற்களில், முட்புதர்களினூடே உன்னால் நடக்கமுடியுமா? அன்பே! எண்ணி ஒரு முடிவுக்கு வா! அழைத்துச்செல்கிறோம்.

"ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்லும்பொழுது பண்ணைகளில் உள்ள நாய்கள் கடிக்கத் துரத்தும். அவைகளினின்று பாதுகாத்துக்கொள்ள உன்னால் ஓடமுடியுமா? சீமாட்டியே! தங்கக்கிண்ணங்களிலே பன்னீர்கொண்டு உன் பாதங்களைக் கழுவிய நீ, மலையோரங்களிலேயுள்ள, பனிமிகுந்த ஓடைகளின் நீரைக்கொண்டு குளிக்கவும் குடிக்கவும் உன்னால் முடியுமா? உன் உடல் இதை ஏற்றுக்கொள்ளுமா? எண்ணிப் பார்த்து ஒரு முடிவுக்கு வா!

"சர்க்கரையும் வெண்ணெயுமிட்ட ரொட்டிகளைச் சுவைத்த நீ, உலர்ந்த ரொட்டியினை எப்படித் தின்னப்போகிறாய்? இயலுமா இது? உனது பட்டுடைகளிலே, ஓடும்பொழுது சேறுபட்டு அழுக்காகும். பனிபெய்து குளிரால் வாடும்பொழுது உன் எலும்புகள்கூட வலிக்கும். பட்டு மெத்தையிலே படுத்துறங்கிய நீ, மண்டபங்களிலேயும் மரத்தடிகளிலேயும் உறங்கமுடியுமா? இவைகளை எல்லாம் தாங்கிக்கொண்டால் உலகத்தின் ஒவ்வொரு பகுதியையும் கண்டு ஆனந்திக்கலாம். ஆற்றங்கரைகளிலே, மலைச்சாரல்களிலே, சோலைகளிலே உணவைக்கூட மறந்தபடி இயற்கையுடன் இயைந்து இன்புற்று வாழலாம். இதையெல்லாம் எண்ணிப்பார்த்து முடிவுசெய். பின் வருவதானால் வா! அழைத்துச் செல்கிறோம்."

"நான் வரவில்லை. இத்தனை இன்னல்கள் இருப்பதானால் நான் வரமாட்டேன். இவைகளை நான் தாங்கிக் கொள்வது ஒருபுறமிருக்கட்டும்; என்னால் இவைகளை எண்ணிப்பார்க்கவே முடியவில்லையே. நீங்கள் செல்லுங்கள். உங்களுடைய அன்பு குறித்து மிகவும் நன்றி! நீங்கள் செல்லுங்கள். நான் வருகிறேன்" என்று சொல்லி அரண்மனையை நோக்கி நடைபோட்டாள். அரண்மனையிலிருந்து புறப்பட்ட பொழுதிருந்த தயக்கம் இப்பொழுது இல்லை. அவளது நடை எழிலாக இருந்தது. தென்றலில் அசைந்தாடும் பூங்கொடி போன்று அவள் நடந்துசென்று கொண்டிருந்தாள்.

நாடோடிகளின் ஏளனச் சிரிப்பு அரண்மனைச் சுவர்களிலே மோதிக் காற்றுடன் கலந்துவிட்டது. அரசி நாணத்தால் தலையைக் கவிழ்த்தவாறே நடக்கலானாள். அரண்மனை வாழ்வை வெறுத்து, சுகம் தேடி ஓடிவந்த அரசி, நாடோடிகளின் இன்னல்கள் அறிந்த பின்னர், அரண்மனை வாழ்வே சுகமென்று எண்ணிவிட்டாள் அந்தச் சுகம் தேடி!

—ப. முல்லைவழுதி.

நூல் நயம்

பாரதியார் கவிதைகள்

ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் அடிமைப்பட்டு வாழ்ந்த நேரத்தில்-தாங்கள் அடிமையாக இருக்கும் நிலையை எண்ணாது வாழ்ந்த நேரத்தில் அவர்களுக்கு விழிப்பை ஊட்டி, நாட்டை மீட்க, கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். தமிழ்நாடு இந்தியத் துணைக்கண்டத்துக்கு அடிமைப்பட்டு, இந்தியத் துணைக்கண்டம் ஆங்கில ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த நேரத்தில் சுப்ரமணிய பாரதியார் தோன்றினார். நாட்டுமக்களின் அடிமை நிலையை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 'விடுதலை' பாடினார். அவர், காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்திருந்த போதிலும், மக்கட் சமுதாயத்தின் மறுமலர்ச்சியில் மனம் செலுத்தத்தான் செய்தார். மூட நம்பிக்கையை ஒழிக்கப் பாடுபட்டார். இந்த அரிய செயல்களைத் தன் கவிதைகளால், பாடல்களால் நிறைவேற்ற முற்பட்டார். அப்போது அவர் பாடிய பாடல்களை, இப்போது நாட்டுக்கே உரிமையாக்கிவிட்டனர் அரசியலார். இதன் பயனால் யாரும் அக்கவிதைகளைப் பிரசுரம் செய்து வெளியிடலாம் என்ற நல்லதொரு நிலை ஏற்பட்டுவிட்டது. இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னர்கூட, அரசியலாரால் வெளியிடப்பட்ட 'பாரதியார் கவிதைகள்' தான் விற்பனையாயின. அதிக விலைகொடுத்தும்கூட அரசியலார் வெளியிட்ட அந்நூலின் அமைப்புத்தரம் சிறந்திருக்கவில்லை. இப்போது அதைவிடக் குறைந்த விலைக்கு, உயர்ந்த முறையில், அந்நூலை வெளியிட்டிருக்கிறார்கள் முரசொலிப் பதிப்பகத்தார். காலிகோ பைண்டுடன் உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள இந்நூலின் விலை ரூ. 5 தான். பலர் வாங்கிப் படிக்க முடியும் என்று எண்ணுகிறோம். நல்ல முறையில்-குறைந்த விலையில் வெளியிட்டுள்ள முரசொலிப் பதிப்பகத்தாரைப் பாராட்டுகிறோம்.

விலை ரூ. 5-0-0

வெளியீடு :
முரசொலிப் பதிப்பகம்
பிராட்வே, சென்னை.

இராஜராஜ சோழன்

ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம் முதலியவற்றை அறிந்துகொள்ளப் பயன்படுவது, வரலாறுதான். வரலாற்று அடிப்படையிலே வைத்துப் பார்த்தால் தமிழகம் உலக நாடுகள் யாவற்றிற்கும் முன்னரே, சிறந்த நாகரிகப் பண்பு உடையதாக இருந்தது தெரிகிறது. வரலாற்றினால், தமிழ் மன்னர் தம் ஆட்சிமுறை, அவர்தம் வெற்றி, அவர்தம் மொழிப்பற்று முதலியவற்றை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது. அத்தகைய வரலாற்றை, நாடகமாக்கிக் காட்டினால், வரலாற்றின் உண்மை நிலையை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளுவார்கள். அந்த அடிப்படையிலே 'இராஜராஜ சோழன்' நாடகத்தை எழுதியுள்ளார் திரு. அரு. ராமநாதன் அவர்கள். டி. கே. எஸ். சகோதரர்களால் நடிக்கப்பட்டு வரும் இந்த அரிய நாடகத்தை நூல் வடிவாக வெளியிட்டிருக்கின்றனர் பிரேமா பிரசுரத்தார்.

இந்த நாடகத்தில், ஆசிரியர், வரலாற்றைத் தெளிவுபடச் சித்தரித்திருக்கிறார். இராஜ ராஜ சோழனின் அரசியல் அறிவு, திறம் படச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மோனைப்புலவர் முத்துப்பல் கவிராயர் என்ற பாத்திரமும், மேதினிக் கவிராயர் என்ற பாத்திரமும், புலவர்களாக சிருஷ்டிக்கப்பட்டிருப்பினும், அவர்களின் உரையாடல், ஓரளவு நகைச்சுவையை ஊட்டி படிப்போரை மகிழ்விக்கிறது. மாற்றானின் சொல்லை வேதம் என்று நம்பிவந்த இராஜராஜன், தேர்ந்த அரசியல் ஞானி என்பதை இறுதியில், இராஜராஜனின் மூலமே உணர்த்துகிற ஆசிரியரின் திறம் பாராட்டுதற்குரியது இச்சிறந்த நாடகநூலைத் தமிழ் மக்கள் படித்துப் பயன் பெறலாம்.

விலை ரூ. 2-4-0

வெளியீடு : பிரேமா பிரசுரம்,
சென்னை-24.

தி சீனியர் ஆட்டோ டீசல் ஸ்டோர்

எஃகு வேலைப்பாடுகள் உட்பட, "டீசல் கன்வர்ஷன் கிட்டுகள்" உற்பத்தி செய்யப்படும். மற்றும் எல்லாவிதமான "பவுன்டிரி" வேலைகளும் ஏற்று உடனடியாக கவனிக்கப்படும்.

அணுகுக :—

முகவரி மாற்றம்

216, வாலர்ஸ் ரோடு,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

கண்களை விற்றுச் சித்திரம் கொள்ளோம்!

7-ம் பக்கத் தொடர்ச்சி -

நல்லாவின் பால்சுவையும், கொம்புத்தேனின் உருசியும் பொதிந்து கிடப்பதை உணர். இவ்வளவு சிறப்போடு கூடிய எனது அன்னையா, அதோ! இலவம் பஞ்சைப் போன்ற தலையோடும் எலும்பு தோன்றிய முகத்தோடும், பொக்கைவாயோடும் 'க்கு' 'க்கு' என்று இருமிக்கொண்டிருப்பவள் என்று நாம் நமது தாயைச் சொல்ல முனைவோமா? அழகுசுந்தரியான உன்னைப்பெற்று பெரியவளாக்கிய உன் அன்னை உன் இன்றைய வயதில் அன்று கொள்ளை அழகோடு காட்சியளித்திருப்பாளென்பதற்கு என்ன சந்தேகம்? உன் அழகைப் பருக, உன் அன்புப் பார்வையை அனுபவிக்க, உனது அகம்கொடுக்க சரந்தீட்டும் காதற்சடிதத்தைப் பெற இன்று உன்னைத் தொடரும் இளைஞர் கூட்டத்தைப் போல், அன்று உன் அன்னைமீது எத்தனைபேர் ஆசை வைத்திருந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார். இதை ஏன் இங்கே குறிப்பிடுகிறேனென்றால், சொந்தத தாய் சோற்றுக்கு வழியின்றித் திண்டாடுகையில், பெற்று வளர்த்த மாதா பிச்சையெடுக்கையில், "ஐயா தருமம் போடுங்கள் சாமி" என்று தெருத் தெருவாக அலையும்போது, இன்னுமொருவன் தாய்க்குப் பாலும், சோறும் படைத்து, பவள அட்டிகையும் பரிசளிப்பவனைப் போல் நாம் இருக்கலாமாவென்று உங்களைக் கேட்பதற்குத்தான். தாய் இளமையில் எப்படிக் காட்சியளித்திருப்பாளோ, அப்படி நம் முந்தையர் காலத்தில் இந்நாடு எவ்வண்ணம் விளங்கியதென்பதைத் தெரிந்துகொள்ளவேதான். நாம் பிறந்த நாட்டைப்பற்றி, அதன் சரித்திர சம்பவங்களைப்பற்றி, அந்நாடு விளங்கிய தனிப்பெரும் சிறப்பைப்பற்றி, சீரழிவைப்பற்றி ஓரளவு சிந்திக்க வேண்டும்.

நாம் பிறந்த நாட்டை இன்று இலங்கை என அழைக்கின்றோம். இந்நாட்டின் சரித்திரத்தை கி.மு. 505-லிருந்தே சகல சரித்திர ஆசிரியர்களும் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு குறிக்கப்பட்ட காலத்திலே மேற்படி ஏடுகள் ஆரம்பிக்கப்பட்டதுமன்றி, விஜயன் என்னும் சிங்கள மன்னன் இலங்கைக்கு வந்தபின்பே கமத் தொழிலும் கைத் தொழிலும், கல்விச்சாலைகளும் தோன்றின என்றும் அவை குறிப்பிடுகின்றன. விஜயன் இங்கு வரும்போது இந்நாட்டைக் காலசேனன் என்பவன் அரசு புரிந்ததாகவும், விஜயனும் அவனது தோழர்களும் காலசேனனைக் கொலை செய்து இராச்சியத்தை அபகரித்ததாகவும் அவை தெரிவிக்கின்றன. புத்தளத்திற்கு அருகில் இறங்கிய விஜயன் அவ்விடம் செம்மண் செறிந்ததாய் இருப்பதைக் கண்டு அதற்கு **தம்பபண்ணை** என்று பெயரிட்டதாகவும் காலவரையில் அப்பெயர் **தாமிர பரணியாக** மாறிற்றென்றும் மேலும் அவை தெரிவிக்கின்றன.

சங்கைக்குரிய பிலிப் ஜி ஸி. மெண்டிஸ், எஸ். எவ். டி. சில்வா, எஸ். ஏ. பேகமன் ஆகியவர்கள் எழுதியுள்ள சரித்திரக் குடியியல் நூல்களை இலங்கையின் பாடப் புத்தகங்களாக அரசினர் அங்கீகரித்துள்ளனர்.

திரு. எஸ். எவ். டீ. சில்வா அவர்களினால் எழுதப்பட்டு சிரேஷ்ட பாட தராதரப்பத்திரப் பரீட்சைக்கு அரசினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள "குடி இயல்" நூலில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"முதன் முதற் குடியேறிய தமிழரின் சந்ததியார் வட மாகாணத்திலும், இலங்கையின் கிழக்குக் கரையோரமாகவும் வசிக்கிறார்கள்.

"தமிழர் இலங்கையில் குடியேறியது இருவிதங்களினால் என்று கூறலாம். ஒன்று தமிழரசர்களின் படையெடுப்பினால், மற்றது மெல்ல மெல்லவாக வந்து இடையூறின்றிக் குடியேறியதால்.

"இந்நாட்டின் மீது ஏற்பட்ட படையெடுப்புகளின் பயனாகவும், தமிழ் யுத்த வீரர்களும், அவர்களுடைய சுற்றத்தவர்களும் இங்கே வந்து குடியேறி இந்நாட்டைத் தம் தாயகமாகக் கொண்டனர். இவர்களுடன் தமிழ் வியாபாரிமாரும் வந்திருக்கலாம். இவர்கள் இவ்வாறு குடியேறியதன் பயனாக பல சிங்கள இடப்பெயர்களுக்குத் தமிழ் மெருகு பூசப்பட்டிருக்கிறது.

"யாழ்ப்பாணக் குடாநாடு ஓர் காலத்தில் சிங்கள இராச்சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது என்பதற்குச் சந்தேகம் இல்லை.

"நெடுங்காலத்துக்குப் பின் இலங்கையின் வடபகுதியில் உள்ள இச் சமபூமியைச் சிங்கள மன்னர் கைவிட, யாழ்ப்பாண இராச்சியம் என்ற ஒரு இராச்சியம் அங்கே உண்டானது. தென்னிந்தியாவிலிருந்து மக்கள் இங்கே புதிது புதிதாக வந்து குடியேறிச் சனத்தொகையைப் பெருக்கினர்.

"தமிழ் மக்கள் இலங்கைக்கு ஓர் புதிய பாஷையையும், ஒரு புதிய பண்பாட்டையும் கொண்டு வந்த, இந்நாட்டின் அரசியல், பொருளாதார, கலைத்துறையில் முக்கியமான பங்கு கொண்டிருக்கிறார்கள்."

திரு. ஜி. ஸி. மெண்டிஸ் எழுதி அரசினரால் அங்கீகாரம் பெற்று பாடப் புத்தகமாக்கப்பட்டுள்ள "நம் முன்னோரளித்துள்ள அருஞ்செல்வத்தில்" குறிப்பிட்டிருப்பதாவது:

"ஆரியரான சிங்களவர் இலங்கைக்கு வந்த சம்பவம் இலங்கைச் சரித்திரத்தில் மிக முக்கியமானது. அவர்கள் இந்நாட்டில் குடியேறிய பின்னரே இத்தீவின் சரித்திரத்தில் பெரிய மாறுதல்களுண்டாயின.

"இலங்கையிற் கமத்தொழிலை முதல்முதலாகப் புகுத்தியவர் சிங்களவரே. இதனால் நிலைபேறான நாகரிக வாழ்வு இலங்கையில் ஏற்பட்டது. முதல் முதல் அவர்கள் நெல்லைப் பயிரிட்டார்கள்.

"இரும்பின் உபயோகத்தையும் சிங்களவரே இலங்கைகு முதல் முதல் கொண்டுவந்தனர்."

இத்தகைய சொற்றொடர்களைக் கொண்ட பாடப் புத்தகங்களைப் பயிலும் இலங்கை மாணவர்களிடம் இருவித மனோபாவம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததே. இவற்றைப் பயிலும் தமிழ் பேசும் மாணவர் கட்கு, இலங்கையில் தங்களுக்கு எதவித சொந்தமும் உரிமையும் இல்லையென்ற உணர்ச்சி உண்டாவது இயற்கையே. அதே சமயத்தில் மேற்படி புத்தகங்களைப் படிக்கும் சிங்கள மாணவ மாணவிகள் இலங்கை தங்களுக்கே சொந்தமானதென்னும் எண்ணம் வலுப்பெறுகிறது என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? இந்த உணர்ச்சிக்கு எதிரில்—சரித்திர, குடி இயல் நூல்களுக்கு எதிரில் தமிழ்பேசும் மக்கள் இலங்கையின் வந்தேறு குடிகளாகவும், தங்கள் தாயகம் இந்தியாவிலுள்ள தமிழ் நாடு எனவும் எண்ணத் தலைப்படுகிறார்கள். இது தப்பானது தவறானதென்பது தான் என் பேச்சின் முக்கிய நோக்கம்.

இன்று காணும் இலங்கைத்தீவும் அதைச் சுற்றியுள்ள கடலின் பெரும் பரந்த நிலப்பரப்புத்தான் தமிழனின் தாயகம். இன்று கூறும் (இந்தியாவில்) தமிழ்நாடு சேய் நாடு வரலாற்றிலே இம்முடிவுக்கு ஆயிரக் கணக்கான சான்றுகள் உண்டு.

இலங்கையின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளுமுன் உலக வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. முதன் முதலாகத் தோன்றிய மண்மேடு—உலகம் லெமூரியா—குமரிக்கண்டம் என்னும் பெயரோடு விளங்கிற்று. அசைவனவும் அசையாதனவுமாகிய ஆதி உயிர்கள் அந்நிலத்தில்தான் தோன்றின. அந்நிலப்பரப்பு இன்றைய உலகில் கிழக்கே அவுஸ்திரேலியாவிலிருந்து மேற்கே ஆபிரிக்காக் கண்டம் வரை பரந்து கிடந்தது. அடிக்கடி நேர்ந்த கடற்கோள்களினால் அப்பெரும் நிலப்பரப்பு சிதறியும், நீருள் மூழ்கியும் போயிற்று. அத்தோடு குமரிக்கண்டம் என்னும் பெயரும் மறைந்து, மடகாஸ்கார், ஜாவா, இலங்கை, இந்தியா, சுமத்திரா, கலிபோர்னியோ, அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்கள் தோன்றின. ஆனால் அந்த ஆதிநிலப்பரப்பில் நாகரிகத்தோடு வாழ்ந்த ஆதிமனிதன் தமிழன். அவன் பேசிய மொழி தமிழ் என்பதற்கும் ஆதாரம் நிறைய உண்டு.

கண்ணதாசன்

நிகழ்ச்சிகள்

டிச 7ம் தேதி காரைக்குடி அழகப்பா கல்லூரியில் நடைபெற இருக்கும் கவி அரங்கில் ஆசிரியர் கண்ணதாசன் கலந்து கொள்வார்.

22-12-55ல் பம்பாய், ஆமதாபாத் புறப்பாடு.



மட்டக்களப்பு தமிழ் வாலிபர் சங்கத் தோழர்களுடன் கண்ணதாசன்.

★ கடுமிருட்டு மாமிமகள் கதவுதிற கண்மணியே ! ★

6-ம் பக்கத் தொடர்ச்சி

யின் எழில் உருவம் நமது மனக் கண் முன்னே நிழலாடுவதைக் காணலாம். பொருளாழம், கவி நயம் எல்லாம் கவிகளில் நிறைய வுண்டு. இன்னுமொரு கவியில் எடுத்தாளப்பட்டுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் அப்பாடலில் நிறைந்துள்ள சீர், சந்தம் முதலிய இலக்கண வரம்புகளையும் கவனியுங்கள்.

பொடுபொடுத்த மழைத்தூற்றல்
பூங்கார மானநிலா
கடுமிருட்டு மாமிமகள்
கதவுதிற கண்மணியே !

இலக்கணம் என்றாலே என்ன வென்று தெரியாத கிராமிய மக்களிடத்தே நிறைந்துள்ள கவிச் செல்வம் எத்தகையது என்று சொல்லவும் வேண்டுமா ? இயற்கையோடு இயைந்த இனிய குரலில் இக்கிராமியப் பாடல்களை இந்நாட்டு இளம் மங்கையர் இசைக்கும்பொழுதல்லவா கேட்கவேண்டும் ? நாம் அப்படியே இன்னிசையோடு இணைந்துவிடுவோம். இந்தக் கிராமிய கவியில் ஆண்களை, பெண்களை என இரு பிரிவுகளுண்டு. ஆணின் வினாவுக்குப் பெண் தரும் பதிலாகவும் சில கவிகளுண்டு. அப்படியான பாடலொன்றைப் பாருங்கள். அப்பாடல் படிக்கும்பொழுது சிலருக்கு ஆபாசம் உள்ளதாகத் தெரியலாம். ஆனால் அப்பாடலில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்தையும் கவி நயத்தையும் அதற்குப் பதிலாக ஒரு பெண் பாடும் பாடலையும் படித்தால் அது ஆபாசமான பாடலல்ல பெரிய தத்துவம் நிறைந்த இலக்கியப் பாடல் என்பதை உணரலாம். ஆற்றிலே நீராடிக்கொண்டிருந்த இளமங்கை யொருத்திடம் ஒரு வாலிபன் கேட்கிறான் துணிச்சலோடு !

மார்பளவு தண்ணீரில் மன்னி
மன்னிப்போற பெண்ணேஉன்
மார்புக்கு மேலேயிருக்கும்
மாதாளங்காய் என்ன விலை ?

இப்பாடல் கொஞ்சம் ஆபாசம் என்று அருவருக்கிறீர்களா? கம்பனும் காளிதாசனும் தங்கள் இலக்கியங்களில் காட்டுகின்ற ஆபாசத்தை விட இது குறைந்ததுதான். கோபிக்காமல் இப்பாடலுக்கு ஆற்றில் நீராடிய அந்த மங்கை அளித்த பதிலையும் கேட்டுவிட்டு இப்பாடலை வேண்டுமானால் எடைபோடுங்கள். அவள் என்ன அழகாக பதில் கொடுக்கிறாள் கவனியுங்கள்.

மாதாளங் காயுமில்லை
மருக்காலும் பிஞ்சுமில்லை
அந்தப் பாலன் குடிக்கும்
பால்முலையடா சண்டாளா !

என்ன உறுதியான பதில்! இப்பாடலில் பொதிந்துள்ள தத்துவம் தான் கொஞ்சமா? காதல் காதல் என்று கூறி காமத்தால் கருத்தழிந்து திரியும் ஆடவர் கூட்டத்துக்கு இப்பாடல் ஒரு மாபெரும் போதனையை உலக தத்துவத்தைப் போதிக்கிறது: இப்படி பல பாடல்கள் கிராமிய இலக்கிய உலகிலே சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றன. இக்கிராமிய கவிகளில் இயற்கை வர்ணனைகள் நிறையவுள்ளன. மாலைவர்ணனை ஒரு கவியில் என்ன அழகாகச் சொல்லப்படுகிறது, பாருங்கள்.

அந்திப் பொழுது
அழகான செவ்வானம்
இந்த நல்ல வேளையில்
எங்கவர் சென்றாரோ ?

அந்திப்பொழுதை - ஆங்கு காணும் அழகிய செவ்வானத்தை அதனால் தலைவிக்குப் பொங்கியெழும் காதலுணர்ச்சியை இப்பாடல் எவ்வளவு அழகாகச் சித்தரித்துக் காட்டுகிறது? அதுமட்டுமா? இக்கவியில் கையாளப்பட்டுள்ள சொற்கள் பல சங்ககால இலக்கியங்களில் உள்ள சொற்களாகும். அந்தி - செவ்வானம் முதலிய சொற்கள் இலக்கியச் சிறப்புடைய சொற்களாகும். இப்படி இலக்கிய மயமாகவே இனிதுற விளங்கும் கிராமிய பாடல்களையும் அதைப் பாடும் கவிக்குயில்களையும் எளிதில் இலக்கிய உலகம் மறந்துவிட முடியாது. இந்தப் பாடல்கள் எந்தெந்த வேளைகளில் உருவாகின்றன என்று பார்த்தால் ஆற்றில் தோணிகொண்டு மீன் பிடிக்கும் இரவு வேளைகளிலும், கிராமத்து மங்கையர் கிணறுகளில் தண்ணீர் அள்ளும்போது வயல் வெளிகளிலே கதிர் பொறுக்கும் போதும், உருவாகுவதை யறியலாம். கிராமங்களில் கவி பாடுவதில் வல்லுணர்களுமுளர்.

கிராமிய இலக்கியம் வெறும் காதல் இலக்கியமாக மட்டுமில்லாமல் பலதுறைகளையும் தொடுவனவாயுள்ளது. எனவே இத்தகையசிறப்பு மிக்ககிராமிய இலக்கியச் செல்வங்களைப் பாதுகாத்து தமிழன்னைக்குச் சிறப்பளிக்கத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும். வாய்ப் பாட்டிலக்கியமாயிருந்து படிப்படியாக அருகிவிடாதவாறு காக்க வேண்டியது தமிழறிஞர் பொறுப்பாகும். காலமெல்லாம் பாடிப் பாடி இன்புறத்தக்க இக்கிராமிய இலக்கியங்கள் மென்மேலும் வளர்ச்சியுற ஆவன செய்யவேண்டும். ''கிராமிய இலக்கியம் தமிழகத்துத் தனிப்பெருஞ் செல்வம், என்ற மனப்பான்மை கொண்டு இக்கிராமியப் பாடல்களை ஒன்று திரட்டிப் பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். ஆயிரக்கணக்கான இலக்கியச் சிறு கதைகளை உருவாக்க இந்தக் கிராமிய இலக்கியங்கள் உதவுகின்றன என்றால் மிகையாகாது. இலக்கியம் இயற்கையுடன் இணைந்தது என்ற கருத்தை வெளிப்படுத்திக் காட்டும் இக்கிராமிய கவிகள் கிராம மக்களின் பண்பாட்டை - நடைமுறை எண்ணங்களைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. மீன்பாடும் தேன்நாடான மட்டக்களப்புப் பகுதியில் நிறைந்துள்ள மற்றுமொரு அதிசயம் கிராமிய இலக்கியங்களாகும். இசையரமகளிரான பாடும் மீனின் இன்னிசையும் கிராமிய இலக்கியமும் ஒன்றுசேர்ந்தால் அதன் இனிமையைச் சொல்லவும் வேண்டுமா? ஊஞ்சற்பாடல், ஒப்பாரி, தாலாட்டு, தெம்மாங்கு என்றெல்லாம் பல பகுதிகளாக இலக்கியப் பணிபுரியும் கிராமியப் பாடல்களைப் படித்துச் சுவைக்கத் தமிழ்மக்கள் முன்வரவேண்டும். புகழேந்தியையும் கம்பனையும் தோற்கடிக்கக் கூடிய இந்தக் கிராமிய கவிக்குயில்களைப் பாராட்டுவதோடு விட்டுவிடாமல் மென்மேலும் கிராமிய இலக்கியம் வளரப் பணியாற்றத் தமிழறிஞர்கள் முன்வருவார்கள் என்பது என் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். வாழ்க கிராமிய இலக்கியம்! வணக்கம்.

★

திராவிடன்

அலுவலகம்

சோமு அச்சகம்

முகவரி மாற்றம்

1-12-55 முதல், கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது

'திராவிடன்'

16-99, அம்மன் கோயில் தெரு

சென்னை - 1.

மாநில மாநாட்டு நிதிக்காக

★

10—12—55 சனிக்கிழமை

மாலை 6 மணிக்கு

கோகலே மண்டபத்தில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் M. A.

அவர்கள் தலைமையில்

நடிப்புப்புலவர்

கே. ஆர். ராமசாமி அவர்கள்

இன்னிசை விருந்தளிப்பார்.

நன்கொடைச் சீட்டு ரூ. 2



மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் ஆசிரியர் கண்ணதாசன்.

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல்_டி

பதில் தருகிறார்

சு. ஆனந்தன் சென்னை-21.

கண்ணகியைவிட கோப்பெண்டு தேவிதான் கற்பில் சிறந்தவள் எனச்சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். இதைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

இக்கேள்வியை சிலப்பதிகாரத்தில் செங்குட்டுவனே கேட்பதாக இளங்கோவடிகள் கேட்டு அதற்கு செங்குட்டுவன் பட்டத்தரசி வேண்மாளே கூறுவதாக மறுமொழியும் தந்துள்ளார். அம்மறுமொழி(சிலப்பதிகாரம் 25-வது காட்சிக்காதை வரி 111-114.)

"காதலன் துன்பம்
காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு
உறுக, வானகத்து!
அத்திறம் நிற்கநம் அகநாடு
அடைந்த இப்
பத்தினிக் கடவுளை
பரசல் வேண்டும்"

பெருங்கோப் பெண்டின் கற்பு அறக்கற்பென்றும் கண்ணகியின் கற்பு, மறக் கற்பென்றும் வேண்மாளின் உட்குறிப்பாக பல அறிஞர் விளக்குகின்றனர். ஆயினும், பெருங்கோப்பெண்டின் கற்பு, தமிழ்ப் பண்பு வாய்ந்த பெண்களின் இயல்பான மனிதக் கற்பேயாகும். அதனை, கற்பின் பண்பு என்றே கூறலாம். ஆனால், கண்ணகியின் கற்பு, தமிழ் இனத்துக்கும் பெண் உலகத்துக்கும் ஒரே சான்றாக நிற்கும் தெய்வக் கற்பாகும். பெருங்கோப்பெண்டு அறத்தின் வழிநின்றாள். தீமையை எதிர்க்கவில்லை. கோவலன் அழிவுவரை கண்ணகியின் நிலையும் இதுவே. ஆனால், கண்ணகி எதிர்க்காது விட்டது கணவன் தவறை மட்டுமே. கணவன் கொலையின் பின், அவள் பொதுவாழ்வின் தீமையை எதிர்த்து, ஆடவர் வீரத்தைவிட ஆயிரம் பங்கு உயர்ந்த பெண்டிரின் 'கற்பென்னும் திண்மை'யின் வலிமையைக்காட்டினாள். பெருங்கோப்பெண்டின் கற்பைவிட கண்ணகியின் கற்பே திருவள்ளுவர் குறிக்கோளாகக் கொண்ட தெய்வக்கற்புக்கு நல்லசான்றாகும். அக்கற்பு தன்னைக் காத்து, கணவனைக் காத்து, உலகில் சால்பை நிலைநிறுத்துவதாக இருக்கவேண்டும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.

எம். சுந்தரம், மாயவரம்.

1. சிவம் என்பது தமிழ்மொழியா? வடமொழியா?

2. ஜன்னல் என்பது எந்தநாட்டுச் சொல்?

1. நாமறிந்த வரை சிவ வணக்கம் தமிழினத்துக்கு வெளியே திபேத் நாடு ஒன்றுடன்தான் தொடர்புடையதாகத் தோற்றுகிறது. (கயிலை, உருத்திராக்கம்) ஆயினும், சிவம் என்ற தெய்வமோ திருமால் என்ற தெய்வமோ, அவ்விரு நெறிகளுக்குரிய சிறப்புப் பண்புகளோ ஆரியருக்குரியதல்ல என்று தான் மிகப் பெரும்பான்மையான அறிஞர் கருதுகின்றனர். ஏனெனில் ஆரிய வேதங்களும் மற்ற முற்கால ஆரிய மரபுகளும் இவ்விரண்டையுமே வன்மையாகக் கண்டித்துள்ளன.

சிவம் என்ற சொல் தமிழ்ச் சொல்லே. வடமொழியிலும் அச்சொல் உள்ளது. ஆண்பாலில் அது சிவபெருமானையும் அஃறிணையில் நன்மை என்ற கருத்தையும் குறிக்கும். பின்னது அதன் தமிழ் வேர்ச்சொல்லைச் சுட்டிக்காட்டுகிறது. சிவம் என்பது செம்மை அடிப்படையாகப் பிறந்த சொல், சிவந்த நிறம், செம்மை அல்லது நன்மை என்ற இரண்டு தொடர்புபட்ட பொருள்களும் அதற்கு உண்டு. பிந்திய பொருளை சிவம் என்ற சமஸ்கிருதச் சொல் காட்டுவதுபோல, முந்திய பொருளை, சிவனுக்கு இணையான ஆரியக் கடவுள் பெயராகிய உருத்திரன் என்பது காட்டுகிறது. ருத்ரா என்ற சமஸ்கிருதச் சொல்லும் எருத்ரா என்ற கிரேக்கச் சொல்லும் சிவப்பு என்ற பொருள்படும் ஆங்கிலச் சொல்லுடன் (Red) தொடர்புடையவை.

செங்கடலுக்கு கிரேக்கர் கொடுத்த பெயர் எருத்ரியன்கடல் என்பதே.

மொஹஞ்சதரோ முத்திரைகளில் பசுபதியாகிய சிவபெருமான் சைவர்களும் சமணர்களும் ஒருங்கே ஏற்றுக்கொள்ளும் முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆரியத்தை ஏற்காத சைவரும், ஆரியத்தை ஏற்காத வைணவருமே நாளடைவில் சமணராகவும் புத்தராகவும் ஆரியரால் ஒதுக்கப்பட்டனர் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

2. ஜன்னல் என்பது போர்த்துக்கீசிய சொல்.

கலையாசு, நெய்யூர்.

1. சிங்கம், கடுவாய், கரடி, புலி இவைகளைத் தமிழர்கள் பொதுவாகப் புலியென்று கூறினர்களா? அல்லது புலியைத்தான் புலியென்றனரா? இலக்கியச் சான்று வேண்டும்.

2. கடுத்தது காட்டும் "முகம்", என்று திருக்குறளில் வரும் சொல் வடமொழியல்லவா! அதற்குத் தூய தமிழென்ன? இலக்கியச் சான்றுடன் விளக்குக.

3. "நல்விருந்து வானத் தவர்க்கு" என்ற திருவள்ளுவர் இயற்றியதின் கருத்தென்ன?

1. தமிழர் கரடியைக் கரடி என்றே குறித்தனர். 'குடாவடி' என்று அதற்கு தனிச் சிறப்புப் பெயரும் உண்டு. புலி புலியே. சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையாகக் குறிக்கப்படுகிறது. கடுவாய் இன்றும் தென்மாவட்டங்கள் தவிர மற்ற இடங்களில் தமிழகத்திலேயே புலியுடன் சேர்த்து எண்ணப்படுகிறது. தமிழ் தவிர வேறு எந்த மொழியிலும் அதற்குத் தனிப்பெயர் இருப்பதாகத் தெரியவில்லை. சங்க இலக்கியத்தில் புலிக்குரிய 'வயமான்' போன்ற ஒரு பொருள் பல சொற்கள் சிங்கத்தையும் குறிக்கலாமோ என்று தமிழறிஞர் எண்ணுகின்றனர். ஏனெனில் தெளிவாக சிங்கத்தைக் குறிக்கக் கூடிய எந்தச் சொல்லும் சங்க இலக்கியத்தில் இல்லை.

சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் அக்காலத்தில் தமிழில் இல்லை என்றும், அது குறிக்கும் பொருள்கள் தமிழகத்தில் இல்லை என்றும், பல ஆராய்ச்சியாளர் திடுமெனத் துணிந்துவிடுகின்றனர். இது பொதுவகையில் தவறல்ல. ஆனால், முடிந்த முடிபும் அல்ல. இக்காலத்தில் தமிழகத்தில் இல்லாத அன்னத்தின் பலவகைகள் சங்க காலத்தில் இருந்தன. எகினம் என்ற பழமையான தனித் தமிழ்ச்சொல் அன்னத்தைக் குறிக்கிறது. தவிர, இன்று தமிழகத்தில் இல்லாத கரடி, ஒட்டகம் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்தில் பெரு வழக்காயிருந்தன. சிங்கம் இன்று உலகில் மறைந்துவரும் ஒரு விலங்கே. அஸாமிலும் தென்னாப்பிரிக்காவிலும் மட்டுமே உள்ளது. அஸாமில் அது அழிந்து ஒழிந்து விடாமல் அரசியலார் சட்டம் மூலம் பாதுகாப்பளித்து வருகின்றனர். தமிழகந்தில் அது முன்பு, அதாவது சங்க காலத்திற்கு முன்பு இருந்தது என்றே கருதலாம். அதற்கு கோளரி, அரிமா, மடங்கல் என்ற தமிழ்ப்பண்பமைந்த தனித் தமிழ்ச் சொற்கள் இருப்பதே இதனைக் காட்டும். சிங்கம் என்ற சொல்கூட சமஸ்கிருதச் சொல் என்று எண்ணப்பட்டாலும் ஆரியச் சொல் அல்ல. இந்தியாவிற்கு வருவதற்குமுன் சிங்கம் ஆரியருக்குத் தெரிந்த விலங்காகவும் இருந்திருக்க முடியாது. சீயம் என்ற அச்சொல்லின் மற்றொரு வடிவம் தமிழ்ச் சொல்லாகவோ பாலிச் சொல்லாகவோ இருக்கலாம். தாய்லந்தின் பேரில் (சையாம் அல்லது சீயம்) சமஸ்கிருதத்தில் இல்லாத இந்தச் சொல்லின் உலகப் பழமையைக் காணலாம்.

தமிழர் திணைவாரியாக செடி, கொடி, விலங்கு முதலியவற்றை வகுத்தனர். கரடி மலையிலும் சிறப்பாக பனிப்பகுதியிலும் வாழும் விலங்கு. கடுவாய், புலி முதலியவை முல்லை நிலம் அல்லது காட்டு விலங்கு. ஆனால் சிங்கமோ காட்டு விலங்கல்ல, பாலைநிலத்துக்குரிய விலங்கு. அதனுடைய பண்புகளை தமிழர் தவிர மற்ற எல்லா இனங்களும் (இன்றைய மேனாட்டினர் உட்பட) சரிவர உணராமல் தடுமாறியுள்ளனர். தமிழர் தடுமாறவில்லை. போதிய அளவு இலக்கியச்சான்று இல்லாமல் அதுபற்றி அவர்கள் கொண்ட கருத்தைத் துணியவும் முடியாது. ஆனால் அவர்கள் கொடுத்த பெயர் அதற்குரிய ஒரே சிறப்பை - பிடரிமயிரை - குறித்துக் காட்டுகிறது. அரி என்பது மென்மயிர். இன்னொரு சிறப்பு முகத்தை பின்னோக்கி சாய்த்துக்கொண்டிருப்பது. இலக்கண நூலார் இதை சிங்கநோக்கு என்பர். மடங்கல் என்ற சொல் இதைக் குறிப்பதாகலாம்.

சங்க காலத்துக்குமுன் கடல் கொண்ட குமரி நாட்டின் நடுப்பகுதி பாலை நிலமாகவும், சூழ்ந்துள்ளபகுதி நானிலம் அல்லதுநால் திணையாகவும் இருந்ததென்று ஆசிரியர் மறைமலையடிகளார் கருதுகிறார். இந்தப் பாலைவனத்தின் வடமுனை இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. அதன் தென்கோடி தென்துருவகத்திற்கு அருகாமையில் ரஷியாவின் தட்ப வெப்பம் உடையதாய் இருந்திருக்கலாம். சிங்கமும் கரடியும் அந் நிலத்துக்குரியவை.

2. முகம்தனித்தமிழ்ச்சொல்லே. முகரை, மூஞ்சி, மோரை, முகப்பு, மூக்கு. முன், முனைப்பு, முன்பு, முண்டு. முகத்தல் ஆகிய சொற்களுடன் தொடர்புடையது. சம்ஸ்கிருதத்தில் வாய் என்பதற்குச் சொல் இல்லாததால் இந்தியாவிற்குவந்த ஆரியர், தமிழ் அல்லது திராவிடத்திலிருந்து இச்சொல்லைக் கடன் வாங்கினர். மற்ற அயல்நாட்டு ஆரிய மொழிகளில் இதன் தொடர்பைக் காணமுடியாது. ஆங்கிலச் சொல் (Face) முற்றிலும் அயல் ஒலியாயிருப்பது காண்க.

3. வான்சிறப்பு என்பதற்கு அடுத்த அதிகாரங்களாக, திருவள்ளுவர், நீத்தார் பெருமையையும் அறன்வலியுறுத்துதலையையும் வைத்துள்ளார். தமிழ் இலக்கியம் முழுவதும் 'வான்' என்ற சொல் பெரிய உயர்ந்த மேலான என்ற பொருள்களில் வழங்கப்படுகிறது. ஆகவே வானத்தவருக்கு என்பது மேலானவர்களுக்கு அல்லது சான்றோர்களுக்கு என்ற பொருளைத் தருகிறது. எல்லாரையும் விருந்தாக ஆவலுடன் வரவேற்பவனை மேலோர்கள் தம் குழாத்தில் சேர்க்க ஆவலாகக் காத்திருப்பார்கள் என்பதே குறட்பாவின் விழுமிய கருத்தாகும்.

புத்தர் சமணர் மேலான பண்புடைய திராவிட இனத்தவரையே அல்லது அவர்களில் சிறந்த ஒரு கிளை மரபினரையே வானவர் என்றும் வித்தியாதரர் என்றும் குறித்தனர் என்று சமணப் பேரறிஞர் சக்கரவர்த்தி நாயனார் அவர்கள் கருதுகிறார்கள். சீனரும் சேரரும் தம்மை வானவர் என்றே குறித்துக் கொண்டனர், இப்பொருள்களில் கொண்டாலும் தவறில்லை. செழிப்புடைய சேரநாடு இன்றும் விருந்தினரை வரவேற்பதில் சிறப்புடையதே.

வெண்பாப் போட்டி

20 'கண்' எனும் சொல் மும்முறை வருதல்

வெண்பாப் போட்டி 20-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

◉ எண்ணும் கலைமலிந்த எந்தமிழர்க் கிந்திமொழி
புண்ணடா புண்ணடா புண்ணாகும்-உண்ணுதற்காம்
தண்ணமுதம் அன்னதொரு செந்தமிழ்தான் செந்தமிழர்
கண்ணடா கண்ணடா கண்.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

★

கற்றோர் அவையினுக்குக் கண்ணவ தன்றியே
மற்றோரால் ஆமோ மதிமுகத்தாய்-பெற்றெடுத்த
பிள்ளை மனைக்குக்கண் பீடுடைய செங்கதிர்தான்
கள்ளமின்றி வானுக்குக் கண்.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்

★

வண்டார்க்கும் மென்மலரே ! வானத்து வெண்மதியே !
கண்ணுற்றே னுன்னை; கருத்திழந்தேன்-கண்ணால்
வலைவீசிச் சென்று மறைந்துவிட்டாய், கண்ணே !
நிலைகுலைந்தே னுன்னை நினைந்து.

—கே. எஸ். கிருஷ்ணசாமி, சிதம்பரம்.

★

கைத்திறனில் ஓவியத்தில் காணுங் கலைக்கூத்தில்
கைப்புனையா வானழகில் காவனப்பில்-தைத்திங்கள்
வெண்ணிலா நெற்களத்தில் வீழ்ந்தே எழில்விழுங்கும்
கண்ணடா கண்ணடா கண் !

—க. ராமசாமி, பொறையார்.

★

கண்காணுந் தெய்வமெலாங் கல்லொடுமண் செம்பல்லால்
மண்ணின்கண் ணேஉளதோ மற்றுமொன்று-எண்ணுங்கால்
ஆரியர்செய் சூழ்ச்சியின்கண் ணாழ்ந்தன்றோ ! நந்தமிழர்
சீரிழந்தார் இன்று சிதைந்து.

—க. வீ. வரதன் சென்னை-23.

★

கண்ணால் வதைசெய்த கட்டழகி என்னகத்தில்
உண்டான புண்ணை உணர்ந்திலளே-என்செய்வேன் ?
துஞ்சாது கண்கள் துயருற, கூடற்கண்
நெஞ்சம் விழையும் நினைந்து.

—கா. ச மூர்த்தி, பழலூர்.

★

தேனொத்த நந்தமிழைத் தீங்குசெய் தேவாழும்
மானமில் லாப்படையை மாய்த்தவுடன்-மோனங்கொள்
விண்ணில் நமதுதமிழ் வீரம் பொறித்ததற்பின்
கண்ணயரும் கண்ணே ! என் கண்.

—அரு. சாரதா, சித்தளந்தூர்.

★

எந்தைக்கோ கண்ணில்லை யான்சிறுமி யென்செய்வேன்
கந்தைக்கோ ராயிரங்கண் காணீரே-தந்தையரே
பண்சேர்த்துப் பாடும் வகையறியேன் பாவியெமைக்
கண்பார்த்துக் கொள்வீரே காத்து.

—நா. கணபதி, நத்தம் கோவில்பட்டி.

★

சேல்கண்ணே ! செங்கரும்பே ! செந்தேன்
மொழிப்பெண்ணே
வேல்கண்ணே ! விண்ணில்காண் வெண்ணிலவே-வஞ்சியுன்
கண்வீச்சில் வீழ்ந்தேன் ! கனிமுத்தம் தந்திடநீ
நண்ணாமல் நிற்பதேன் ?

—அன்பிஞெளி, கட்டிமேடு.

கண்டறியாக் காலமுதல் கன்னி மொழியாகிக்
கண்ணுக்குக் கண்ணாய் தென்னவர்க்கே !-
ஒண்டவந்தோ
இந்தி திரட்டிவரும் ஈசற் படைஎள்ளிச்
செந்தமிழே கொஞ்சம் சிரி.

—மாணிக்கம், சிவகங்கை

★

கண்ணில்லை யென்றாலும் கண்மணியுன் நற்றுணையால்
எண்ணச் சுழலில்நான் ஏங்காமல்-கண்பெற்றே
வாழ்வில் ஒளிகண்டு வாழ்கின்றேன் ! நீயின்றேல்
வீழும் எனதுவுயிர்.

—ஏ. சிவா, வேலூர்

★

கண்கனலை வீசும் காரணத்தை யானறிந்தேன்
பண்தமிழின் வாழ்வையிங்கு பாழாக்க-பெண்தன்மை
கொண்டவட நாட்டவர்கண் கொள்ள அதைக் கண்ணுற்று
கண்டதன்றி வேறில்லை காண்.

—தா நாராயணன், பெரும்பாக்கம்

★

புண்ணான இந்திதனைப் போக்கித் திருவிடத்தின்
கண்ணான நந்தமிழைக் காத்திடுவீர் !-கண்ணாளா !
வாட்டமேன் ? என்றே மனத்தெழுந்த எண்ணமெலாம்
காட்டிற்றே காதலியின் கண்.

—பெ. இராமலிங்கன், திருமாநிலையூர்.

★

பெற்றதாய் நாட்டின் பெரும்பற்றும் அந்நாட்டிற்(கு)
உற்றதாய் உள்ள மொழிப்பற்றும்-பெற்றுயிரு
கண்ணாகப் பேணிக் கருத்தாய் வளர்ப்பவரின்
கண்ணேதான் கண்ணுலகின் கண்.

—கி. சுந்தரேசன், அண்ணாமலைநகர்.

★

போரின்கண் மார்புற்ற புண்வடுவும் வாழ்வின்கண்
ஆரியத்தை விட்டொழித்த ஆண்மையும்-ஊரின்கண்
வள்ளுவத்தைப் போற்றுதலும் வாள்விழியே சீர்தருமால்
உள்ளமதில் கொள்க உவந்து

—முருகதாசன், சென்னை.

★

வடவனின ஆட்சியின்கீழ் ஆளுந் தமிழா,
மடவனென வாழ்தல் முறையோ-திடமிலையா ?
உன்கண் குருடோ? உன் மெய்க்கண் உணர்விலையோ
வன்கண்மை மாய்த்திடுவோம் வா.

—சாமி. எழிற்செல்வன், பாகனேரி.

★

கண்ணாளர் ஐவரன்றிக் கன்னனையும் காதலித்த
பெண்ணொருத்தி பத்தினியோ? பொற்பாவை-கண்ணகியின்
கண்ணீர்தான் சாற்றாதோ கற்பை ! கனியொத்த
தண்டமிழின் மாண்பே தனி.

—தமிழ்மணி, சிவகங்கை.

★

கண்ணாளன் மாண்டான் களத்தில் எனக்கேட்ட
புண்ணான நெஞ்சத்தாள் பூரிப்போடு-தன்மகனை
கண்மணியே ! சென்றுகளம் வெல்கபகை என்றுரைத்த
பெண்ணவளே நற்குலத்தின் கண்.

—தில்லைக்குமாரன், தூத்துக்குடி.

★

மற்றவனைத் தேடும் மனையாளின் ஓரக்கண்
உற்ற கணவர்க் குயிர்கொல்லி-அற்றவராய்
உள்நாட்டார் சாக, 'உலகத்தைப்' பார்க்குங்கண்
கள்ளத் தனமான கண் !

—டி. வி. பச்சையப்பன், மதுரை.

★

கண்ணகல் ஞாலத்தில் கல்வியாம் நற்கண்ணை
எண்ணி மிகப்பேணி ஏற்றிட்டார்-கண்ணுடையர்
அல்லாதார் புண்ணுடையர் ஆவர் இதையறிந்தே
நல்லோய்நீ கல்விதனை நாடு.

—மா. ரா. வஞ்சிக்கோ, மதுரை.

◉ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஜ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.